விலை ரூபா 1-00 ★

விசேட மலிவு விற்பனே!
அகலம் குறைக்கப்பட்ட
[மஸ்கன்ஸ்] அஸ்பெஸ்டஸ்
கூரைத்தகடுகள்
12' X 3' — 10' X 3'
8' X 3' — 6' X 3'
தொடர்புகள்:
ஆனந்தி அன் கோ;
கே. கே. எஸ். வீதி, மல்லாகம்.
[துர்க்காதேவி
ஆலயத்திற்கு அருகாமையில்]
4385

# ஈழநாடு
THE EELANADU

பிறந்தநாள் வாழ்த்து
இணுவில் மேற்கைச் சேர்ந்த
கணபதிப்பிள்ளே
செந்தில்குமார்
தனது 25வது பிறந்தநாளே
இன்று தனது இல்லத்தில்
குதூகலமாக கொண்டாடுகிறுர்.
உற்றுர், உறவினர், நண்பர்கள்
இவரை நீடூழி வாழ்க!
என வாழ்த்துகின்றனர்.
4585

மலர் 24 புரட்டாதி 3 ஜுலக்ஜ் 1 இதழ் 218
யாழ்ப்பாணம் ஞாயிற்றுக்கிழமை 19—9—82

# தேர்தல் சட்டங்கள் கடுமையாக அமுல்!

## மாவட்டங்கள் தோறும் கட்சிப் பிரமுகர்களுடன் பொலிஸ் மகாநாடு

(கொழும்பு)

தேர்தல் சட்டங்களேக் கடுமையாக அமுல்நடாத்தும்படி இருபத்திரண்டு மாவட்டங்களிலுமுள்ள பொலிஸ் அத்தியட்சகர்களுக்கு தேர்தல் களுக்குப் பொறுப்பாகவுள்ள சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் உத்தரவிட்டுள்ளார்.

ஜனுதிபதித் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளேச் சேர்ந்த அந்தந்த மாவட்டங்களின் முக்கிய பிரமுகர்களுடனும் மகாநாடொன்றை நடாத்தி பாதுகாப்பு நடவடிக்கைகளே விளக்கி, அமைதிக்கும் ஒழுங்குக்குமான ஏற்பாடுகளே மேற்கொள் ளும்படியும் பொலிஸ் அத்தியட்சகர்களே அவர் மேலும் கேட்டுக்கொண் டுள்ளார்.

அக்டோபர் 20ம் திகதி நடக் கவுள்ள ஜனுதிபதித் தேர்தலே யொட்டி பொலிஸ் தலைமைக் காரியாலயத்தில், தேர்தலுக் கான தனிப்பிரிவொன்று நிறு வப்பட்டுள்ளது. இப்பிரிவுக்கு வெளியூர்களிலுள்ள பொலிஸ் தலைமையகங்கள் தேர்தல் சம் பந்தமான அறிக்கைகளேச்சமர் ப்பிக்கவேண்டுமெனவும் கேட் கப்பட்டுள்ளதாக திரு சுந்தர லிங்கம் தெரிவித்துள்ளார்.

சகல பொலிஸ் நிலேயங்களி லும் தேர்தல் சம்பந்தமான விபரங்களேக் குறித்துக்கொள் வதற்குப் பதிவேடு ஒன்றை வைக்கவேண்டுமென்றும் அவர் உத்தரவைப் பிறப்பித்துள் ளார்.

ஜனுதிபதி தேர்தலில் போட் டியிடும் வேட்பாளர் தமது இல்லத்தில்கூட கொடியைக் கட்டக்கூடாது. பொது இடங் களிலும் கொடி கட்டுவதற்கு அனுமதியளிக்கப்படமாட் டாது என்று தெரிவித்த பிரதி பொலிஸ் மாஅதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம், கூட்டமாகக் கூடுவதைத் தவிர்க்கும்படியும் அமைதியையும், ஒழுங்கையும் ஏற்படுத்த பொதுமக்கள் தங் கள் ஒத்துழைப்பை அளிக்கும் படி கேட்டுக்கொண்டுள்ளார்.

## 'அமிர்' மகன் பகீரதன் சென்னையில் கைது!

### கிரிக்கட் பார்வையாளர்களேத் தடைசெய்தாராம்

சென்னே செப். 18

சென்னே சிதம்பரம் சேப் பாக்கம் மைதானத்தில் நடை பெற்றுவரும் இலங்கை – இந் திய கிரிக்கெட் டெஸ்டைப் பார்ப்பதற்குச் சென்றவர் களேத் தடுத்த இலங்கை எதிர்க்கட்சித்தலைவர் திரு. அ. அமிர்தலிங்கத்தின் மகன் பகீரதன் சென்னேயில் கைது செய்யப்பட்டார்.

பகீரதன் உட்பட ஆறு இளே ஞர்கள் இதுதொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இந்திய கிரிக்கெட் டெஸ் டைப் பார்க்கச் சென்றவர் களுக்கு இவர்கள் இலங்கைத் தமிழரின் நிலேகுறித்து துண்டுப் பிரசுரங்களே விநியோகித் துள்ளனர்.

இந்த ஆறு இளேஞர்களும் தற்போது றிமாண்டில் வைக் கப்பட்டுள்ளனர். (இ-வெ)

## அமைச்சர் 'தேவா' மௌனம்

(இரா. துரைரத்தினம்
இரா. உதயகுமார்)

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்தி சபைக்கூட்டம் நேற்று மட்டுநகர் அரசாங்க செயலகத்தில் சபாமண்டபத் தில் திரு. எஸ். சம்பந்தமூர்த்தி தலைமையில் நடைபெற்ற போது உள்நாட்டு அலுவல்

8-ம் பக்கம் பார்க்க)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று கொழும்பு தலைமை யகத்தில் இழுக்கப்பட்டதேசிய லொத்தர் சபையின் 901வது சுவீப் சீட்டிழுப்பு முடிவுகள் வருமாறு:

முதலாவது பரிசு
**04 N 0845**
ரூ. 1,000-00

இரண்டாவது பரிசு
**19 Z 0757**
ரூ. 40 000-00

மூன்ருவது பரிசு
**21 U 0145**
ரூ. 10,000-00

தலா 1035 ரூபா ஆறுதல் பரிசுபெறும் 100 டிக்கட்டுகள் வருமாறு.

| | |
|---|---|
| 01 A 0369 | 08 A 0685 |
| 12 A 0533 | 17 A 0413 |

| | |
|---|---|
| 20 A 0115 | 21 B 0266 |
| 21 B 0719 | 21 B 0815 |
| 2 B 0540 | 25 B 0340 |
| 04 C 0996 | 05 C 0517 |
| 07 C 0475 | 09 C 0843 |
| 20 C 0436 | 20 C 0936 |
| 26 C 0061 | 75 D 0099 |
| 25 D 0849 | 1 E 0023 |
| 21 E 0864 | 23 E 0615 |
| 04 F 0833 | 23 F 0239 |
| 25 F 0409 | 11 G 0093 |
| 12 G 0013 | 14 G 0255 |
| 23 G 0998 | 01 H 0142 |
| 07 H 0254 | 08 H 0385 |
| 22 J 0595 | 06 K 0193 |
| 12 L 0457 | 15 L 0677 |
| 23 L 0712 | 03 M 0751 |
| 04 M 0067 | 08 M 0781 |
| 10 M 0973 | 17 M 0022 |
| 17 M 0199 | 20 M 0746 |
| 24 M 0587 | 29 N 0820 |
| 03 O 0868 | 05 O 0102 |
| 05 O 0237 | 05 O 0634 |

[8ம் பக்கம் பார்க்க]

## ஜனுதிபதித் தேர்தலில் கூட்டணியின் நிலேஎன்ன?

### இன்று பொதுச்சபையில் முடிவு

[யாழ்ப்பாணம்]

ஜனுதிபதி தேர்தலில் தமிழர் விடுதலேக்கூட்டணியின ரின் நிலே என்ன என்பது இன்று நடைபெறும் அதன பொதுச்சபைக்கூட்டத்தில் முடிவு செய்யப்படும்.

நேற்றுக்காலே நல்லூர் எம். பி.யின் அலுவலகத்தில்கூடிய செயற்குழுவினர், ஜனுதிபதி தேர்தல் சம்பந்தமான விஷயம் பொதுவான கருத்தாக இருப்பதால், பொதுச் சபையின் முடிவுக்கு விட்டுவிடுவதென்ற முடிவுக்கு வந்துள் ளனர்.

நேற்றுக்காலே அடுத்துக் கூடிய தேர்தல் நியமனக் குழுவும், வட்டுக்கோட்டை எம்.

[8ம் பக்கம் பார்க்க]

யாழ். நகரில் நவீனவசதிகள் கூடியது
ஹோட்டல் றெலெக்ஸ்
தேன்சிந்தும் ஐஸ்கிறீம், பொம்பே சுவீற்ஸ்
வகைகளுக்கும் சுவைமிக்க கோழிப்புரியாணி
வகைகளுக்கும் யாழ்.நகரில் சிறந்து விளங்கும்
ஸ்தாபனம்
HOTEL ROLEX
340, ஆஸ்பத்திரி வீதி – யாழ்ப்பாணம்
4559

COMPUTER
PROGRAMMING
COURSE
கிழமை நாள் வகுப்புகள் ஆரம்பமாகிவிட்டன
சனி ஞாயிறு வகுப்புகள்
ஆரம்பம் – 25-09-82
கன்ரேபியா கல்வி நிலேயம்
21, பிரதான வீதி, யாழ்ப்பாணம்.
தொலேபேசி: 24201
4566

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

மண்ணெண்ணெயில் இயங்கும் இரண்டுசக்கர உழவு இயந்திரம் பெட்டியுடன் நல்ல நிலைமையில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: ந. ரகுபதி. ஊரெழு அம்மன் கோவிலடி, உரும்பராய். 4557

மொறிஸ்மைனர் 1000 தொடர் 4 ஸ்ரீ 9336 கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: "சாந்தாவாசா", வேம்படி, கிழக்குத்தெரு, வல்வெட்டித்துறை. 4548

புதிய (பெட்டி உடைக்கப்படாத நஷனல் வீடியோ டெக் மொடல் NV 300 EN- இரண்டு, JVC வீடியோ கமரா (மொடல் GX 88-E இரண்டும் விற்பனைக்குண்டு. தொடர்பு: P.சிவயோகராஜா, "சதாபொன்ஸ்", அல்வாய் தெற்கு, அல்வாய். 4536

வண்ணார்பண்ணை கோபால் ஒழுங்கையில் (நாவலர் சந்திக்கு அண்மையில்) ஒன்றரைப் பரப்புக் காணியுடன் சேர்ந்த மின்சாரம், கிணறு வசதியுடன் கூடிய கல்வீடு விற்கப்படும். நேரில் தொடர்பு கொள்க. இரா. பாலசிங்கம், 'ஸ்ரீமுருகவாசா,, 23, கோபால் ஒழுங்கை, யாழ்ப்பாணம். (4530)

யாழ்ப்பாணம் ஸ்ரேசன், பிரபல கல்லூரிகளுக்கு அண்மையில் 2 பரப்புக் காணியும் மேல் வீட்டுடன் (சகல வசதிகளும் உண்டு) விற்பனைக்கு உண்டு. தொடர்பு; எஸ். பொன்னுத்துரை 'அம்பிகாபவனம்', திருநெல்வேலி, பலாலி வீதி, தொலைபேசி எண். 8255 (பழையது), 24255 புதியது. (4523)

உரும்பிராய் கிழக்கில் வீதியோரத்தில் மூன்றரைப் பரப்புக் காணி, கல்வீடு கிணற்றுடன் விற்பனைக்குண்டு, விபரங்களுக்கு: M. புஸ்பராசா, G. P. S, ரோட், கல்வியங்காடு, யாழ்ப்பாணம். (4522)

யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மகளிர் கல்லூரியிலிருந்து ½ மைல் தூரத்தில் கொழும்புத்துறை வீதியில் 2 பரப்பு காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 15, நக்கா ரோட், யாழ்ப்பாணம், 4500

புனரமைக்கப்பெற்ற C. 90, C. 50, C. 70 மோட்டார் சைக்கிள்களும் DELICA வான்களும் விற்பனைக்குண்டு. மற்றும் எந்தவிதமான வாகனங்களும் குறைந்த விலையில் ஆட்களுக்கு நேரடியாகத் தருவித்துக் கொடுப்போம். நா. சாம்பசிவம் அன் கோ. 54 கஸ்தூரியார் வீதி யாழ்ப்பாணம். 4563

திருநெல்வேலி பாம்ஸ்கூலில் இருந்து 100 யார் தூரத்தில் ஏறத்தாழ 3½ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு கொள்க: சி. பாலசுப்பிரமணியம், தபாற்கந்தோர் பங்களா, கோண்டாவில். 4576

யாழ்ப்பாணம் நம் 64 கஸ்தூரியார் வீதியில் கேந்திர ஸ்தானத்தில் அமைந்துள்ள கடை ஒன்று உடன் விற்பனைக்குண்டு. விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4574 மே/பா "ஈழநாடு" லிமிட் யாழ்ப்பாணம். 4574

## விற்பனைக்கு

கீரிமலை கமத்தொழில்சேவை நிலையத்திற்கு அருகாமையில் வீடுகட்ட, தோட்டம் செய்யக்கூடிய பன்னிரண்டு பரப்புக்காணி விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு: கா. துரைசாமிக்குருக்கள், சிவன்கோவிலடி, கீரிமலை. 4569

பின்வருவன விற்பனைக்குண்டு: HONDA C B 175 சிவப்புநிற 80 ஸ்ரீ தொடர் இலக்க மோட்டார் சைக்கிள் பலாலி ரோட் முதல் ஒழுங்கையில் வீட்டுடன் நாலு பரப்புக் காணி, கேரதீவு செல்லும்வழியில் 6-ம்கட்டையில் தென்னம்பிள்ளை, மாமரம் ஆகியவற்றுடன் 48 பரப்புக் காணி. தொடர்பு: V.J.ஞானநாயகம் 88/3, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம், தொலைபேசி: 7185. [4568]

பாவிப்பில் நல்ல நிலையில் உள்ள 9 ஸ்ரீ Italy Fiat 128 மொடல் 1100 CC மோட்டார் கார் விற்பனைக்குண்டு. தொடர்பு: க. தளையசிங்கம், 51, சம்பியன் லேன், கொக்குவில் கிழக்கு. 4571

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் காங்கேசன்துறை வீதியில் 465/1, என்னும் இலக்கத்தில் கிட்டத்தட்ட ½பரப்பு வெறும் காணி விற்பனைக்குண்டு கீழ்க்காணும் விலாசத்தில் தொடர்பு கொள்ளவும். ம முத்துலிங்கமாஸ்டர் மே/பா, சி. கனகரத்தினத்திற்கு கொடுப்பது, சி. சி. பாடசாலைக்கு அருகாமையில், நீர்வேலி. 4533

Ford Prefect 2 ஸ்ரீ தொடர் இலக்க கார் விற்பனைக்குண்டு. [டாக்டரின் சொந்தப்பாவிப்பிலுள்ளது] தொடர்பு: 50, கண்டி வீதி, யாழ்ப்பாணம். 4560

'அவெரி' (Avery) மேடைத்தராசு விற்பனைக்குண்டு. பார்வையிடவும், விலை விபரங்களுக்கும் தொடர்பு கொள்க; மனேஜர் பவர் அன் கொம்பனி 5, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம். 4564

## தவறிவிட்டது

4-9-82 கண்டி வீதி, நாவற்குளிக்கும் யாழ்ப்பாணம் பிறவுண் ரோட்டுக்குமிடையில் 294964 இலக்க சாரதி லைசென்சும், இன்சூரன்ஸ் கொப்பியும், வரிப்பததிரமும் கொண்ட நீலநிற சைக்கிள் கவருடன் தவறிவிட்டது கண்டெடுத்தவர் தயவு செய்து பின்வரும் முகவரியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். எஸ். தனராஜா, "பாவானிவிலாஸ்", கச்சான் அல்வா கொம்பனி, 32/1, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம். (4577)

## வகுப்புகள்

தட்டச்சு, சுருக்கெழுத்து வகுப்புகள் ஆரம்பம் 20-9-82, ஐலன்ட் இன்ஸ்ரியூட், (விகாரை எதிரில்), 58, ஸ்ரான்லிவீதி, யாழ்ப்பாணம். (4531)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

## தேவை

எமது ஸ்தாபனத்திற்கு விற்பனையாளர்கள் உடன்தேவை. 35 வயதிற்கு உட்பட்டவர்கள் விரும்பத்தக்கது. நேரில் தொடர்பு கொள்ளவும். A. சுப்பையா & கோ. 4, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 4545

நவநாகரீக ஆடைகள் தைக்கும் நிலையத்திற்கு [பெண்கள், சிறுவர்] கட்டிங் வெட்டுவதில் அனுபவமுள்ள பெண்கள் தேவை. முகவரி சிவாஸ் இன்டஸ்றீஸ், 1003, திருநகர்-கிளிநொச்சி. 4546

பேக்கரி வேலையில் அனுபவமுள்ள ஆட்கள் தேவை. பிஸ்கட் பேக்கிங் செய்வதற்கு பெண் பிள்ளைகளும் தேவை. உடன் நேரில்வரவும். அனந்த் பிஸ்கட் தயாரிப்பாளர்கள், சண்டிலிப்பாய். (மாசியாபிட்டி சந்திக்கு அருகில்). 4547

நகைக்கடை வியாபாரத்திற்கேற்ற பெரிய அளவிலான திண்டுக்கல் இரும்புப்பெட்டி (Iron Safe) தேவை. விபரங்களுக்கு; ச. நேசராசா, 239, பலாலி வீதி, யாழ்ப்பாணம், போன்: 23089. (4556)

பண்டாரவளையிலுள்ள பிரபல சப்பாத்துக்கடையை நிருவகிக்கக்கூடிய அனுபவமுள்ள முகாமையாளர் தேவை. விளம்பர இல. 4555, C/o ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 4555

"கதிரைகளுக்கு குசன் (Cushion) தைக்கக் கூடியவர்கள் தேவை. தொடர்ச்சியான வேலை உண்டு. அனுபவமுள்ளவர்கள் மட்டும் விண்ணப்பிக்கவும். விளம்பர இல: 4554, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். 4554

மட்டக்களப்பு வாழைச்சேனையிலுள்ள வயல், தென்னந்தோட்டம் ஆகியவற்றை மேற்பார்வை செய்வதற்கு அனுபவமுள்ள மேற்பார்வையாளர்கள் தேவை. (இளைப்பாறிய விவசாயஉத்தியோகஸ்தர் விரும்பத்தக்கது) குடும்பத்துடன் வசிப்பதற்கு இடவசதியுண்டு. சம்பளம் பற்றிய விபரங்கள் நேரில். கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். S.K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4552

பெற்றோல் நிரப்பும் நிலையத்தை மேற்பார்வை செய்வதற்கு அனுபவமும் ஆங்கில அறிவும் உள்ளவர்கள் தேவை. விபரங்களுக்கு: S. K. கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4551

உழவு யந்திரம் ஓட்டுவதில் அனுபவமுள்ள டிரைவர்கள் தேவை. விபரங்களுக்கு: S. K கணேசநாதன், காடி தோட்டம், கிரான். 4550

தரமான தமிழ் தட்டச்சு யந்திரம் உடன் தேவை சகல விபரங்களுடன் நேரில் தொடர்பு கொள்ளவும்: முகாமையாளர் 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். 4575

நிதி நிறுவனம் ஒன்றின் உயர் பதவியில் இருக்கும் தனி ஆளுக்கு யாழ். நகரிலிருந்து இரண்டு மைல் சுற்றுடலுக்குள் குளியலறையுடன் இணைந்த அறை (சகல வசதிகளும் உடையது) வாடகைக்கு தேவை கடிதமூலம் தொடர்பு கொள்ளவும்:- விளம்பர இல. 4565 C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 4565

## தேவை

யாழ்ப்பாணம், இசை மன்றத்திற்கு வாரநாட்களில் மட்டும் வயலின், வாய்ப்பாட்டு கற்பிக்க தராதரம் பெற்ற ஆசிரியை உடன்தேவை. கடித மூலம் தொடர்பு கொள்க. விளம்பரஇல; 4582, C/O, ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 4582

## கேள்வி அறிவித்தல்

கீழ் குறிப்பிடப்படும் பொருட்கள் கேள்விப்பத்திரம் மூலம் விற்பனை செய்யப்படும்.

1. யப்பானிலிருந்து புடவை பதனிடும் ஆலைக்கான இயந்திரவகைகள் மற்றும் உபகரணங்கள் அடைக்கப்பட்டு வந்த கள்ளிப் பெட்டிப் பலகைகள்.
2. கழிவுப் பருத்தி நூல். (Cotton waste) 300கிலோ

கேள்விக்கான விண்ணப்பங்கள் பதிவுத் தபால் மூலம் அரக்கு முத்திரையிடப்பட்டு 27-9-82 காலை 10 மணிக்கு முன் கிடைக்கக்கூடியவகையில் கீழ்க்காட்டப்படும் விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும். மீள் அளிப்புச் செய்யப்படும் வைப்பாக ரூபா 100/- செலுத்தி அதற்காக எம்மால் வழங்கப்படும் பற்றுச் சீட்டு இலக்கம் கேள்வி விண்ணப்பத்தில் குறிப்பிடப்படல் வேண்டும். வைப்புப் பணம் செலுத்தப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

குறிப்பிட்ட பொருட்களை கோண்டாவில் இருபாலை வீதியிலுள்ள எமது மின்தறிஆலை வளவில் வேலை நேரங்களில் பார்வையிடலாம்.

பொதுமுகாமையாளர்,
யாழ். மாவட்ட புடவை நெசவாளர் கூட்டுறவுச் சங்கம்
10/1, மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம். 4535

யாழ்ப்பாண அக்கடமி

க. பொ. த.
உயர்தர பரீட்சை
ஆகஸ்ட் 1983

## மீட்டல் வகுப்புகள்

க. பொ. த. உயர்தர பரீட்சைக்கு ஒருமுறையாவது தோற்றிய எவரும் இந்த மீட்டல் வகுப்புகளில் சேரலாம்.

சேர விரும்புவோர் அக்கடமி காரியாலயத்தில் உள்ள விண்ணப்பப்படிவங்களில் விண்ணப்பிக்கவும்.

வகுப்புகள் 13-9-82ல் ஆரம்பமாகின்றன.

அதிபர்,
தொலைபேசி எண்: 617
376, பிரதான வீதி,
சுண்டுக்குளி,
யாழ்ப்பாணம். 4 2[illegible]

## கேள்விப் பத்திரம்

ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்,

2000 (இரண்டாயிரம்)வெற்றுச் சாக்குகளுக்கு கேள்விப் பத்திரம் கோரப்படுகின்றது. ரூபா 2/50 செலுத்தி சங்கத்தில் இருந்து பெறப்பட்ட பத்திரத்தில் "பொது முகாமையாளர், ப நோ. கூ. சங்கம், ஊர்காவற்றுறை என்னும் விலாசத்திற்கு பதிவுத் தபாலிலோ அல்லது நேரிலோ கேள்விப்பத்திரங்கள் 24-9-82-ந் திகதிக்கு முன் அனுப்பி வைக்கவேண்டும். கேள்விப்பத்திரங்கள் 23-9-82-ந் திகதி பகல் 12-00 மணிவரை விநியோகிக்கப்படும். விண்ணப்பதாரர் ரூ. 750/- வைப்புப்பணம் செலுத்தி இருத்தல் வேண்டும்.

பதில்
பொதுமுகாமையாளர்,
ஊர்காவற்றுறை
ப. நோ. கூ. சங்கம்,
ஊர்காவற்றுறை.

13-9-82. 4526

சேர் பொன். இராமநாதன்
**ஞாபகார்த்த விரிவுரைகள்**
பேராசிரியர்: எஸ். வி. சிட்டிபாபு
(துணைவேந்தர், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்)
இடம்; இராமநாதன் மண்டபம்
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திகதி: 27-09-1982, 28-09-1982
நேரம்: மாலை 5-00 மணி
யாவரும் வருக (4427)

**சவூதி அராபியாவில் வேலை ஆட்கள்**
(LABOURER GRADE)
**உடனடியாகத் தேவை!**

பிரமாணம்:
- உயரம்:- 5' 2'' க்கு மேலும்
- நெஞ்சு:- (CHEST) 32''க்கு ,,
- நிறை:- 110 இருத்தலுக்கு மேல்.
- வயது:- 22க்கும் 45க்கும் உட்பட இருக்க வேண்டும்.

தகுதியானவர்கள் பாஸ்போட்டுடனும், ஒரு போட்டோ கொப்பியும் தங்கள் முழு விபரத்தையும் ஆங்கிலத்தில் (HANDWRITTEN APPLICATION) எழுதிக்கொண்டு கீழ்க்காணும் யாழ்ப்பாண விலாசத்தில் வரும் செவ்வாய்க்கிழமை (21-09-82)லும், புதன் கிழமை (22-09-82) லும் காலை 8-00 மணி தொடக்கம் மாலை 3-00 மணி வரை நேர்முகப் பரீட்சைக்கு வரவும்.

எங்களுக்கு வேறு ஒரு ஏஜன்சியும் யாழ்ப்பாணத்தில் கிடையாது.

வே. இரத்தினசபாபதி,
கொழும்புத்துறை மேற்கு சனசமூக நிலையம்,
5, இலந்தைக்குளம் ரோட்,
கொழும்புத்துறை, யாழ்ப்பாணம்.

**Construction & Development Co Ltd,**
37, S. de. S. Jayasinghe Mawatte,
NUGEGODA.
Labour Licence No. 96, Ref. No. FE / 1 /118
(4543)

# இஸ்ரேலிய படைகள் மே. பெய்ரூட்டிலிருந்து விரைவில் வாபஸ்!

## லெபனுன் பிரதமர் உறுதி

பெய்ரூட் செப் 18

**மேற்கு பெய்ரூட்டிலிருந்து இஸ்ரேலியப் படைகள் விரைவில் வாபஸ் பெறப்படவுள்ளதாக லெபனுன் பிரதம மந்திரி தெரிவித்துள்ளார்.**

இது தொடர்பாக லெபனுன் இராணுவத்தினர் இஸ்ரேலிய அதிகாரிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளதாகவும் அவர் கூறினுர்.

அதேவேளை லெபனுனிலிருந்து சகல அந்நியத் துருப்புக்களும் வாபஸ் பெறப்பட வேண்டுமென்று அமெரிக்காவும் இத்தாலியும் கோரியுள்ளன.

அமெரிக்காவின் இக்கோரிக்கையை இஸ்ரேலிய அமைச்சரவை நிராகரித்துள்ளது.

மேற்கு பெய்ரூட்டிலிருந்து இஸ்ரேலிப் படைகள் வாபஸ் பெறப்பட்டால் அது லெபனுனின் முன்னேற்றத்திற்கு வழிவகுக்குமென்று அமெரிக்க ஜனுதிபதி திரு. றெனுல்ட் றீகன் தெரிவித்துள்ளார்.

மேற்கு பெய்ரூட்டில் புதுப்பிக்கப்பட்ட இராணுவ நடவடிக்கைகளை பிரான்ஸ் பிரதம மந்திரியும் கண்டித்துள்ளார்.

சகல அந்நியத்துருப்புக்களும் உடனடியாக அங்கிருந்து வாபஸ் பெறப்படவேண்டுமென்றும் அவர் கேட்டுள்ளார்.

மேற்கு பெய்ரூட்டிலுள்ள சோவியத் தூதரகத்தை இஸ்ரேலியப் படைகள் ஆக்கிரமித்துள்ளதை சோவியத் யூனியன் வன்மையாகக் கண்டித்துள்ளது. (வெ)

---

ஜனுதிபதிதேர்தல் பிரசாரம்:

## ஜே. ஆருடன் 'தொண்டா' வவனியா வருகிருர்

[வவுனியா]

வன்னி தேர்தல் தொகுதிகளுக்கு தேர்தல் பிரசாரத்திற்கு வரவிருக்கும் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவுடன் கிராமிய கைத்தொழில் அமைச்சரும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவருமான திரு. எஸ். தொண்டமான் வருகைதரவுள்ளார் என நம்பமாகத் தெரியவருகிறது.

ஜனுதிபதி தேர்தல் பிரசாரத்துக்கு அடுத்தமாத முதல் வாரத்தில் வரவிருக்கும் திரு. ஜெயவர்த்தன மன்னுர், முல்லைத்தீவு, வவுனியா ஆகிய இடங்களில் நடைபெறும் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வார்.

மற்றும் சிரேஷ்ட அமைச்சர்களும் இவர்களுடன் வரவுள்ளதாக ஐ தே. க. பிரமுகர் ஒருவர் தெரிவித்தார்.

அடுத்தமாதம் 2ம் திகதி வவுனியா நகரசபை திறந்தவெளி அரங்கில் ஜனுதிபதி தேர்தல் பிரசாரக் கூட்டம் நடைபெற ஏற்பாடாகியுள்ளதாகவும் இக் கூட்டத்தில் ஜனுதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன, அமைச்சர் திரு. எஸ். தொண்டமான், அமைச்சர் திரு காமினி திசாநாயக்கா உட்பட பல அமைச்சர்கள் பேசுவார்கள் என்றும் வவுனியா மாவட்ட அபிவிருத்திசபை ஐ. தே. க. உறுப்பினர் டாக்டர் வி. பரராஜசிங்கம் தெரிவித்தார். [அ]

---

## 5 லட்சம் மக்கள் தொழுகை

புதுடில்லி, செப். 18

காஷ்மீர் முதலமைச்சர் ஷேக்அப்துல்லாவின் மறைவையொட்டி அசுரத்பல் மசூதிக்கு அருகே 5லட்சம் மக்கள் நேற்று தொழுகை நடத்தினர்.

---

## விடுதலைவீரர் காலமானுர்

சென்னை, செப். 18

விடுதலைப் போராட்ட வீரர் கங்காதரர் பாண்டே தமது 93 வது வயதில் நேற்று சென்னையில் காலமானுர்.

---

## பிரிட்டன் - ஜப்பான் விஞ்ஞான ஒத்துழைப்பு

டோக்கியோ செப் 18

''பிரிட்டனும், ஜப்பானும் விஞ்ஞானத்துறையில் பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டும்.''

இவ்வாறு ஜப்பானிற்கு விஜயம் செய்துள்ள பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கரட் தட்சர் நேற்று ஜப்பானியப் பிரதம மந்திரி திரு. சுசூக்கியுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போது தெரிவித்தார்.

திருமதி தட்சருக்கும், திரு. சுசூக்கிக்குமிடையிலான உயர்மட்டப் பேச்சுவார்த்தை எதிர்வரும் திங்கட்கிழமை இடம்பெறவுள்ளது.

பிரிட்டிஷ் பிரதம மந்திரி திருமதி மார்கரட் தட்சர் ஆறு நாட்கள் ஜப்பானில் தங்கியிருப்பார். (வெ)

---

அஸாம்

## வெள்ள நிலைமை மோசம்; மக்கள் உணவுக்கு கஷ்டம்

புதுடில்லி செப் 18

அசாம் மாநிலத்திலுள்ள இரு மாவட்டங்களில் வெள்ள நிலைமை மோசமடைந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது

வெள்ளப்பகுதிகளில் நிவாரண் வேலைகளை மேற்கொள்ள இராணுவத்தின் உதவி கோரப்பட்டுள்ளது.

அசாமில் மக்கள் குடியிருக்கும் பல பகுதிகள் நீருள் மூழ்கியுள்ளன. வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பார்சல்கள் ஹெலிகாப்டர் மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

உத்தரபிரதேசத்தில் வெள்ளத்தினுல் பாதிக்கப்பட்ட பகுதிகளை பிரதம மந்திரி திருமதி இந்திரா காந்தி இன்று பார்வையிடவுள்ளார். (வெ)

---

## "அடிப்படை மனித உரிமைகளை மீறவில்லை"

### பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி கூறுகிருர்

வாஷிங்டன் செப் 18

"நான் அடிப்படை மனித உரிமைகளைமீறி ஆட்சி நடத்தவில்லை. எனது ஆட்சியில் அடிப்படை மனித உரிமைகளுக்கு தீங்கு இழைக்கப்படவில்லை."

இவ்வாறு பதினுறு வருடங்களுக்குப் பின்னர் அமெரிக்காவிற்கு விஜயம் செய்துள்ள பிலிப்பைன்ஸ் ஜனுதிபதி திரு. பேர்டினன்ட் மார்க்கஸ் அங்கு நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் உரையாற்றுகையில் கூறினுர்.

இவர் அம் மாநாட்டில் தொடர்ந்து பேசுகையில், ஆட்சிமன்ற உறுப்பினர்களுடனும், மாநில ஆளுநர்களுடனும் கலந்தாலோசித்த பின்னரே தாம் நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் தெரிவித்தார்.

இம் மகநாட்டில் இவர் 35 நிமிடங்கள் உரையாற்றினுர்.

திரு. மார்க்கஸ் ஆணவப் போக்குடன் தான் ஆட்சி நடத்துவதாகத் தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டுகள் ஆதாரமற்றவை என்றும் கூறினுர். (வெ)

---

## விபத்து 30பேர் பலி

புதுடில்லி, செப். 18

உத்தர பிரதேசத்திலுள்ள ரேய்பெரேலி தொகுதியில் இடம்பெற்ற ட்ராக்டர் விபத்தொன்றில் 30 பேர் பலியானதாக அறிவிக்கப்பட்டது.

---

யாழ். மாவட்டம்

## 35 குளங்களும், வாய்க்கால்களும் அணைக்கட்டுகளும் புனரமைக்கப்படும்

(புலோலி)

யாழ். மாவட்டத்தில் இவ்வாண்டு சிறிய நீர்ப்பாசன வேலைத் திட்டத்தின் கீழ் 35 குளங்களையும் வாய்க்கால், அணைக்கட்டுகளையும் புனரமைப்புச் செய்வதற்கான நடவடிக்கைகளை யாழ். மாவட்ட கமநலச்சேவைத் திணைக்கள உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் துரிதமாக மேற்கொண்டு வருகின்றுர்.

இச்சிறிய நீர்பாசன வேலைத் திட்டத்தில் தொகுதிவாரியாக நீர்ப்பாசனக்குளங்கள் செப்பனிடப்பட்டுப்புதுப்பிக்கப்பட இருக்கின்றன.

கீழ்க்காணும் புனரமைப்பு வேலைகள் நடைபெறும்,

ஊர்காவற்றுறைத்தொகுதி; மின்னியன் அணைக்கட்டு, கண்ணகி அம்மன் கோவில் அணைக்கட்டு, துளாவில் குளம், மதகு ஒழுங்கியக்கி நிர்மாணித்தல், ஒழுச்கண்டல்குளம், சர்வோதயவாவிஒழுங்கியக்கி, பெருங்குளம் வாய்க்கால், சுருவில் கரம்பன் அணைக்கட்டு கோப்பாய்த்தொகுதி; உச்சில்குளம், பெரிய குளம், கேணிக்கிராய்க்குளம்' சாளிப்பிட்டி, செம்மணி அணைக்கட்டு. வட்டுக்கோட்டைத்தொகுதி: ஒடைக்கிராய்க்குளம். திக்கிராய்க்குளம், கல்லூரண்டாய் அராலி அணைக்கட்டு. மானிப்பாய்த் தொகுதி: பறவைக்குளம், வேவில், வழுக்கையாறு, கிராய் வழுக்கையாறு, சிலம்பாய்க்குளம். பருத்தித்துறைத் தொகுதி: கொடிக்கட்டு வாய்க்கால், நீர்வளச் சேனை, வாய்க்கால். உடுப்பிட்டித்தொகுதி: ஒந்திராயக் குளம், தேவரணைக்கட்டு, குளங்கரை வாய்க்கால், முதலைக் கடவை வாய்க்கால். காங்கேசன்துறைத் தொகுதி: கூர்த்தியாவத்தைக்குளம், நாக்கணுங்கட்டைக்குளம், உச்சியோலைக்குளம், பாணுவெட்டி குடாக்கரை வாய்க்கால். சாவகச்சேரித் தொகுதி: திட்டியன் மடு வெள்ள அணைக்கட்டு, சுடலைப்பிட்டி றெகுலேற்றர், ஒட்டுவெளி வாய்க்கால், இறமாவில் குளம், திம்பிறிவில் வயல்வெளி வாய்க்கால், பழுதனைக்குளமும், வாய்க்காலும். (க)

---

## இந்திரபாலா அமெரிக்கா பயணம்.

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக நுண்கலைப் பீடத் தலைவரும் வரலாற்றுத் துறைப் பேராசிரியருமான கலாநிதி கா. இந்திரபாலா அமெரிக்கா பயணமானுர்.

இவர் அடுத்த மாதம் 10ம் திகதியளவில் நாடு திரும்புவார். (வெ)

---

## ஜனுதிபதிதேர்தல்: பிரசாரக்கூட்டம் இன்று

(யாழ்ப்பாணம்)

ஜனுதிபதி தேர்தலில் திரு குமார்: பொன்னம்பலத்தை ஆதரித்து இன்று மாலை யாழ். திறந்தவெளி அரங்கில் முதலாவது பிரசாரக்கூட்டம் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாநகர சபை உறுப்பினர் திரு. எஸ். யேசுதாசன் தலைமையில் நடைபெறும் இக் கூட்டத்தில் சட்டத்தரணி எஸ். ஆர். கனகநாயகம், சட்டத்தரணி எம். மோதிலால் நேரு, யாழ். மாநகரசபை உறுப்பினர் திரு. கே. செபஸ்தியாம்பிள்ளை. உட்பட பலர் உரையாற்றுவார்கள். (க)

---

## தமிழ் எழுத்தாளர் மறைவு

சென்னை, செப். 18

பிரபல தமிழ் எழுத்தாளர் த. குமாரசாமி நேற்று சென்னையில் காலமானுர். இறக்கும் போது அவருக்கு 75 வயதாகும்.

---

ஜனுதிபதி தேர்தல்

## யாழ். மாவட்ட ஊழியருக்கு பயிற்சி வகுப்பு

(யாழ்ப்பாணம்)

ஜனுதிபதி தேர்தலை முன்னிட்டு, யாழ். மாவட்டத்தில் தேர்தல் காலங்களில் கடமையாற்றும் அதிகாரிகள், ஊழியர்களுக்கான பயிற்சி இம்மாதம் 24 ம்திகதி நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்குப் பொறுப்பாக யாழ். மாவட்ட திட்டமிடல் பிரதி பணிப்பாளரும், தேர்தல் தெரிவு அத்தாட்சி உதவி அதிகாரியுமானதிரு. எஸ் சிவதாசன் இருப்பார்.

யாழ். மாவட்டத் தேர்தல் உதவி ஆணையாளர் திரு. எஸ். ஜெயரத்தினம், யாழ் அரசாங் அதிபரும், யாழ். மாவட்டச் செயலாளருமான திரு. தேவநேசன்நேசையா ஆகியோர் இப் பசிற்சி வகுட்புகளில் கலந்து கொண்டு, உரையாற்றவுள்ளனர். [மா]

---

## 25 வது ஆண்டு நிறைவுவிழா

(துணுக்காய்)

வன்னேரிக்குளம் குடியேற்றத் திட்டம் ஆரம்பிக்கப்பட்டு 25 ஆண்டுகள் பூர்த்தியானதையொட்டி வன்னேரிக்குளம் உதயதாரகை சனசமூக நிலையமும் வன்னேரிக் குளம் கிராமோதய சபையும் சேர்ந்து இவ்விழாவை இம் மாதம் 28ம் திகதி நடாத்தவிருக்கின்றன.

இவ்விழாவிற்கு வன்னேரிக்குளம் கிராமோதய சபைத்தலைவர் திரு. ஆ. துரைராசசிங்கம் தலைமைதாங்குவார்'

இவ்விழாவில் பகல் நிகழ்ச்சியாக நடக்கும் பொதுக் கூட்டத்தில் யாழ். மாவட்ட அமைச்சர் தி. விஜயக்கோன் யாழ் .அரசாங்கஅதிபர் திரு. தேவநேசன் நேசையா, கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. க. வீ. ஆனந்தசங்கரி மற்றும் மேலதிகாரிகளும் உரை நிகழ்த்துவார்கள்.

இவ்வைபவத்தில் இக்கிராமத்தின் தேவைகள் குறித்து இப்பகுதி மக்களால் நேரடியாக மகஜர்கள் கையளிக்கப்படும்.

இரவு நிகழ்ச்சியாக நாடகம் நடனம், பட்டி மன்றம், கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறவுள்ளது. (க- வெ)

# ஜனதிபதி தேர்தல்: வேட்புமனு தாக்கல்:

பதவியிலிருக்கும் ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தன வின் பிறந்த நாளான நேற்று முன்தினம் அதாவது செப்டம்பர் 17ம் திகதி புதியஜனதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டுவிட்டன. சுயேச்சையாகப் போட்டியிடவிருந்த மூன்று வேட்பாளரின் மனுக்கள் நிராகரிக்கப்பட்டுவிட்டதையடுத்து அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் சார்பில் வேட்பு மனுக்கள் தாக்கல்செய்த ஆறு பேர் களத்தில் நிற்கிறார்கள். சிங்கள அகர வரிசையின்படி போட்டிக்கு நிற்கும் வேட்பாளர்களின் பெயர்கள் பின்வருமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

* கொப்பேகடுவ, ஹெக்டர் செனரத் ராஜகருண பண்டா, * ஜெயவர்த்தன, ஜூனியஸ் றிச்சார்ட், *தசில்வா, கொல்வின்றெஜிஞல்ட், * நாணயக்கார, தெல்காவத்தகே விக்ரம திலக்க வாசுதேவ, * பொன்னம்பலம், காசிநாதர் கணேசர், * விஜேவீர, றோகண நந்தசிறி.

சுயேச்சையாகப் போட்டியிடவேட்புமனுதாக்கல்செய்த முதியான்சே தென்னக்கூன் திரு. கொப்பேகடுவவின் மனு குறித்து கிளப்பிய ஆட்சேபனையில் திரு. கொப்பேகடுவவின் கட்சித்தலைவர் குடிஉரிமைகளை இழந்தவரென்றும் அதனல் இத்தேர்தலில் போட்டியிட இவருக்குத் தகுதியில்லையென்றுப் கூறியதை தேர்தல் ஆணையாளர் திரு. சந்திரானந்த டி சில்வா நிராகரித்துவிட்டார்.

சுயேச்சையாகப் போட்டியிட வேட்புமனு தாக்கல செய்யவந்த திக்வலையைச் சேர்ந்த மில் சொந்தக்காரரான திரு. சோமதாச எதிரிவீர விஜயசூரியவின் மனு குறித்து மக்கள் விடுதலைமுன்னணி பொதுச்செயலாளர் திரு போப்பகே கிளப்பிய ஆட்சேபனையில் வேட்பாளர் ஒரு அங்கீகரிக்கப்பட்ட கட்சியின் சார்பில் போட்டியிடாதது ஒருபுறமிருக்க அவர்முன்னுள்பாராளுமன்ற உறுப்பினருமல்ல என்பதைச் சுட்டிக்காட்டினர். இது ஏற்றுக் கொள்ளப்பட்டது. மேலும் திரு.விஜயசூரிய தாம் முன்னுள் பாராளுமன்ற உறுப்பினரா என்பதைக் குறிக்க வேண்டிய இடத்தை மனுவில் ஒன்றும் குறிப்பிடாமல் விட்டிருந்து பின்னர் சேர்க்கப்பட்டிருந்தது கண்டுபிடிக்கப்பட்டது. இவர் தமது மனுவில் தமது வயது 50 வருடம் மூன்றுமாதம் 17 நாள் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனல் அவருக்கு 30 வயதுகூட இருக்காது என்று பத்திரிகையாளர்கள் கருதினர்கள்.

முன்னுள் பிரதி அமைச்சர் திரு. நுவரபக்ஷ ஹேவயலாகே கிர்த்திரட்ண தாம் ஒரு சொந்தத் தோட்டம் வைத்து நடத்தும் தோட்டத்துரை என்று குறிப்பிட்டிருந்தார். ஆனல் தமது வேட்பு மனுவில் 'சம்மதம்' தெரிவிக்கவேண்டிய இடத்தில் ஒன்றும் குறிப்பிடாமையால் நிராகரிக்கப்பட்டார்.

வேட்டி சட்டையுடன் வந்திருந்த அ. இ. த. காங்கிரஸ் வேட்பாளர் திரு. குமார் பொன்னம்பலம் தம்மை ஒரு சட்டத்தரணி என்று குறிப்பிட்டிருந்தார்.

ஐ. தே. கட்சியின் வேட்பாளரான திரு. ஜே. ஆர். ஜயவர்த்தன மனுவில் இலங்கை ஜனநாயக சோஷலிஸக் குடியரசின் ஜனதிபதி என்று குறிப்பிட்டிருந்தார்.

வேட்பாளர்கள் மிகவும் சுறுசுறுப்பாகவும், தமாஷாகவும் காணப்பட்டனர். சிலர் குசலம் விசாரித்துக்கொண்டனர் பலர் திரு. ஜயவர்த்தனவுக்கு பிறந்த நாள் வாழ்த்துக்கூறினர். திரு. றோகண விஜயவீரா மாத்திரம் சற்று 'சீரியஸாக' காணப்பட்டார்.

இவ்வாறு ஜனதிபதி தேர்தலுக்கான வேட்பு மனு, தாக்கல் செய்யப்பட்ட நேரத்தில் இடம்பெற்ற சம்பவங்கள்' தமாஷ்கள் பற்றி செய்திகள் வந்துள்ளன. இனிதேர்தல் பிரசாரம் சூடுபிடிக்கும், வேட்பாளர்கள் தம் திறமைகள், சாதனைகள், சாதிக்கப்போ

## பி. எஸ். பி.

பவை பற்றியெல்லாம் எடுத்து விளாசுவார்கள்.

அடுத்த மாதம் 20ம் திகதி மக்கள் தீர்ப்பு எப்படியிருக்கும் என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!

0 0

## தலதா மாளிகை யானை பிழைத்தது ஜே. ஆருக்கு நல்ல சகுனம்?

### தலதாமாளிகை யானை

ஸ்ரீதலதா மாளிகையின் மூத்தகொம்பன் யானை ராஜாவுக்கு எழுபத்தாறு வயது. ஜனதிபதி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும் எழுபத்தாறு வயதுதான்.

இந்த யானை அண்மையில் நோய்வாய்ப்பட்டு படுத்த படுக்கையாக விருந்தது. கடந்த 50 ஆண்டுகளாக ஆகஸ்ட் மாதத்தில் நடக்கும் எசல பெரஹராவில் மாளிகை சின்னத்தை முதுகில் சுமந்து பவனிவந்து கொண்டிருந்த யானை இந்தமுறை பெரஹராவில் கலந்து கொள்ள முடியாமலிருக்கிறது என்று கேள்விப்பட்டதும் ஜனதிபதி அவர்கள் மிகுந்த அக்கறை கொண்டு அந்த யானையைக் குணமாக்குவதற்கு விசேஷத்திறமை கொண்ட மிருக வைத்தியர்களுக்கு ஏற்பாடு செய்தார். காதில் புண் ஏற்பட்டு கஷ்டப்பட்டுக்கொண்டிருந்த யானை மிருக வைத்தியரின் சிகிச்சையினல் குணமடைந்துவிட்டது பெரஹராவிலும் கலந்து கொண்டது.

இது திரு. ஜயவர்த்தனவுக்கு மிகுந்த மகிழ்ச்சியைக் கொடுத்திருக்கும் என்பதில் சந்தேகமில்லை.

ஐ. தே. கட்சியின் சின்னம் யானையாயிருப்பதாலும் தலதா மாளிகையின் யானையின் வயதும் தமது வயதாகவிருப்பதாலும் மாத்திரமல்ல அந்த யானையைக் காப்பாற்றியதனல் அதன் மூலம் மும்மாணிக்கங்களின் ஆசி தமக்குக் கிடைக்குமென பௌத்தரான ஜனதிபதி நம்பக்கூடும்.

தலதா மாளிகையில் உள்ள பௌத்த பெருமானின் புனித சின்னங்களே இந்த நாட்டில் சிங்கள பௌத்தர்களின் ஆட்சியைக் காப்பாற்றி வருவதாக ஒரு நம்பிக்கை. இந்தச் சின்னங்களைக் கொண்ட மாளிகை வெள்ளையர்களின் கைளில் சிக்கும் வரை சிங்கள தேச பக்தர்கள் சரணடையாமல் போரிட்டு வந்ததாகக் கூறுவார்கள். அச்சின்னம் எவர் கட்டுப்பாட்டில் இருக்கின்றதோ அவர்கள் நாட்டை ஆள்வார்கள் என்பது சிங்கள மக்கள் நம்பிக்கை. அந்தவகையில் பௌத்த சின்னங்களை பவனியில் எடுத்துச் செல்லும் யானையின் உயிரைக் காப்பாற்றியதன் மூலம் அந்தப் புண்ணியம் தம்மைச் சேருமென்றும், ஜனதிபதி தேர்தலில் இது தமது வெற்றிக்கும் சகல நிறைவேற்று அதிகாரங்களையும் கொண்ட ஆட்சிக்கும்வழிவகுக்கும் என்றும் அவர் நம்பினல் ஆச்சரியம் இல்லை.

0 0 0

### தேர்தலில் அவதூறு

தேர்தல் பிரசாரங்களில் மாற்று வேட்பாளர்களை அவதூருகப் பேசுவது தேர்தல் சட்டத்தில் தடை செய்யப்பட்டுள்ளது. சாதாரணமாக ஒரு வேட்பாளரை மற்றவர் அவதூருகப் பேசினல் தகுந்த ஆதாரங்களுடன் வழக்குத் தொடரவும் அதன் மூலம் நஷ்டஈடு பெறவும் வாய்ப்பிருக்கிறது. ஆனல் ஒரு சமூகத்தைப் பற்றிஅவதூருகவும் பொதுமக்களை அந்தச் சமூகங்களுக்கு எதிராகத் தூண்டிவிடும்விதத்திலும்தேர்தல் கூட்டங்களில் பேசுகிறவர்கள்மீது நடவடிக்கை எடுக்க வசதியில்லாதிருப்பது துரதிஷ்டமாகும்.

தேர்தல் மேடைகளானலும் பொதுமேடையானலும் ஒரு சமூகத்தின் உணர்வை இன்னெரு சமூகத்திற்கு எதிராக தூண்டும்வகையில் பேசப்படுவதைத் தடுக்க ஏதாகிலும் வழிசெய்ய எவரும் முன்வருகிறார்களில்லை.

இனக்கலவரங்கள் ஏற்படும் போது அதில் நேரடியாகச் சம்பந்தப்படும் ஒருசிலர் எங்காவது சிக்கிக்கொள்கிறார்கள் சில சமயம் தண்டனைக்கும் ஆளாகிறார்கள். ஆனல்இப்படியானவர்களைத் தூண்டிவிட்டு காரியம் சாதிப்பவர்கள் சாதுரியமாகத் தப்பிவிடுகிறார்கள். நேரடியாக இனக் கலவரங்களில் இறங்குகிறவர்களைவிட திரைமறைவிலிருந்து தூண்டிவிடுகிறவர்களே அபாயகரமானவர்கள்.

'பிள்ளையையும் கிள்ளிவிட்டு தொட்டிலையும் ஆட்டும்' நயவஞ்சக மனப்பான்மை கொண்ட அரசியல் ஆசாடபூதிகளுக்கு ஆண்டவன்தான் தண்டனை கொடுக்க முடியும்.

# பிரிட்டிஷ் பிரஜாவுரிமை: இலங்கையர் நிலைஎன்ன?

## நெஞ்சம் மறவாத நினைவுகள்-- 10

லண்டனில் வாழும் இலங்கையர் பலரை சந்திக்கும் வாய்ப்பு எனக்கு அங்கு கிட்டியது!

—அவர்கள் அங்கு வாழ்ந்து கொண்டிருந்தாலும், பெருந்தொகையானவர்களின் உள்ளங்கள் எல்லாம் இலங்கையிலேயே இருப்பதை உணர்ந்து கொண்டேன்.

என்னவோ உழைக்கிறோம்! உழைக்கும் காசை, இலங்கை காசால், பெருக்கிப் பார்த்து, அந்த 'சந்தோஷத்தில்' நாட்களைப் போக்காட்டிக் கொண்டிருக்கிறோம் இலங்கையிலிருக்கும் பெற்றோர், சகோதரர்கள், உற்றார், உறவினர்கள், நண்பர்களை யோசித்து, நம்

-ராஜகோபால்

மால் செய்யமுடியுமானதைச் செய்கிறோம்! எப்பொழுது தான் நம் நாட்டில் போய்ச் சேரப்போகிறோமோ? நிரந்தரமாக அங்கு வாழப்போகிறோமோ?'' —இப்படி ஏக்கப் பெருமூச்சுடன் காலத்தைப் போக்குபவர்கள்தான் ஏராளம்! ஏராளம்!

1972ம் ஆண்டுக்கு முன்னர் இங்கிலாந்துக்குப் போன சகல வெளிநாட்டினருக்கும், இங்கிலாந்தில் எவ்வித 'விசா' பிரச்னையுமின்றி நிரந்தரமாகத் தங்குவதற்கு அரசு அனுமதி அளித்துள்ளது

—அந்தந்த நாட்டுப் பிரஜையாக இருக்கமுடியாது. ஆனல், அதே நேரத்தில், பிரிட்டனில் நிரந்தரமாக வாழ ஒருசிறு சலுகை!

### புதிய சட்டம்

—நான் லண்டனில் இருந்த சமயம், அரசு ஒரு புதிய சட்டத்தைக் கொண்டுவந்தது. நிரந்தரமாக இருப்பதற்குச் சலுகை கொடுக்கப்பட்டவர்கள் பிரிட்டிஷ் பிரஜைகளாக மாறினல்தான், அவர்கள் அந் நாட்டிலே எவ்வித கஷ்டமுமின்றி, நிரந்தரமாக வாழ முடியும் என்பதே அச் சட்டம்!

இலங்கைப் பிரஜையாக இருப்பவர், பிரிட்டிஷ் பாஸ்போர்ட் எடுத்து, அந்நாட்டுப் பிரஜையாக மாறிவிடவேண்டும்! இதன்மூலம், இங்கிலாந்தில் வெள்ளைக்காரர்களுக்குக் கிடைக்கும் சகல உரிமைகளும் வழங்கப்படும்.

இதைப்பற்றி நான் நம்மவர்கள் பலரிடமும் அபிப்பிராயத்தைக் கேட்டுப்பார்த்தேன்.

எனக்குப் பத்துவயதில் ஒரு பெண் குழந்தை இருக்கிறாள். அவள் இங்கிலாந்தில் பிறந்தாள்! இங்கேயே படிக்கிறாள்! பள்ளிக்கூடத்தில் அவள் வெள்ளைக்காரப்பிள்ளைகளுடன்தான் பழகுகிறாள்! வெள்ளைக்காரச் சிறுமிகள் தான் அவளது சிநேகிதிகள்! வீட்டில் அவள் எங்களுடன் இருக்கும் நேரம் குறைவு. அவளை இனி இலங்கைக்குக் கொண்டு வந்து அந்தச் சூழ்நிலைக்கு ஏற்ப வாழ வைக்க முடியுமா?''

—மிடில்ஸ் பறோ என்ற இடத்தில் அந்தத் தமிழ்க்குடும்பத்தைச் சந்தித்தபோது அந்தக் குடும்பத் தலைவன் ரவீந்திரன்தான் இம்படி ஒரு கேள்வியை எழுப்பினர்.

''பிரிட்டிஷ் பிரஜையாக வேண்டியதுதான்! நாம்பிறந்த மண்ணுக்கு விடுமுறையில் வந்துபோக வேண்டியதுதான்! பிறக்க ஒரு நாடு! பிழைக்க ஒரு நாடு! என்னசெய்வது? விரும்பாமல் சில காரியங்களைச் செய்ய வேண்டியுள்ளது!''என்கிறார் ரவீந்திரன்.

### என்னவசதி என்ன வாழ்க்கை

கிங்ஸ்டன் என்ற இடத்தில் யோகரத்தினம் என்ற இளைஞரையும், அவரது செனிக்கா என்ற மனைவியையும் சந்தித்தேன். கணவன் மனைவிக்குமிடையில் இந்த விஷயத்தில் கருத்துவேறுபாடு!

''எவ்வளவு நல்லதொரு சந்தர்ப்பத்தை பிரிட்டிஷ் அரசு தருகிறது. இவர் என்னடா வென்றால், தாயுடன் போய் இருக்கப் போகிறேனும்! என்ன வசதி, என்னவாழ்க்கை! என்ன குறை இங்கு இருக்கிறது? பிரச்னை எதுவுமில்லாத வாழ்க்கை! எவருடைய தலையீடும் கிடையாது! இந்த அருமையான வாழ்க்கையை விட்டு விட்டுப் போகப் போவதா?'' என்று யோகனின் மனைவி செனிக்கா கேட்கிறார். ஆனல் யோகனே ''இந்த யந்திர வாழ்க்கை வெறுத்து விட்டது! ஒரு நாட்டில் பிறந்து, இனனெரு நாட்டில் பிரஜாவுரிமை பெறுவதா? வெட்கக்கேடு!'' என்கிறார்.

என்ன முடிவு எடுப்பார்களோ, எனக்குத் தெரியாது!

### பிச்சை வேண்டாம்

விம்பிள்டன் சவுத்பார்க் றோட்டில் வசிக்கும் சண்முகதாசன் குடும்பம் இதில் மிகவும் இறுக்கமாகத் தமது கருத்தைத் தெரித்தார்கள்.

''போகத்தான் போகிறோம். வேண்டாம் எமக்கு இந்த பிரிட்டிஷ் பிரஜை என்ற பிச்சை! வெள்ளைக்காரனுகி விடுமோ? பிறந்தநாடுதான் எமக்குப் பொன்னுடு'' என்றார்கள்.

பலரும் பலவித கருத்துக்களுடன் இருக்கிறார்கள். நிச்சயமாக, எவருமே இந்த 'பிரிட்டிஷ்' பிரஜாவுரிமை என்ற விஷயத்தில விருப்பமேயில்லை. ஆனலும் வாழவேண்டும்! வாழ்க்கையை ஓட்டவேண்டுமே.

(5-ம் பக்கம் பார்க்க)

## காயத்திரி சித்தர்

நூரளை ஸ்ரீஇலங்காதீஸ்வரர் ஆலயத்தில் உலகில் பலபாகங்களிலுமிருந்தும், வேறுமதத்தவர்களும் இனத்தவர்களும் வந்து தத்தம் கர்மவினைகள், தீராதவியாதிகள் தீர்க்கப பெற்று செல்கிறார்கள். இவ்வாலயத்தை நான்கு ஆண்டுகளுக்குமுன் தாபித்து நடத்திவருபவர்; காயத்திரி உபாசச் சித்திபெற்ற காயத்திரி சித்தர் ஸ்ரீ. ஆர். கே. முருகேசு சுவாமிஜீ.

இச்சித்தர் பாரதத்தில் காடு 'பனிமலைகளில் உறைந்து, வாழும் பெரும் தபஸிகள், ரிஷிபரம்பரையினர். சித்தர் மரபினரை அண்டி அவர்களிடமிருந்து பெற்ற ஆன்மீக இரகசியங்கள், சித்துவித்தைகள், ஆன்மீக உயிர் மூலிகைகளைக் கொண்டு தம்மிடம் வருவோருக்கு கைமாறுகருதாதுசேவை செய்துவருகிறார். ஸ்ரீ இலங்காதீஸ்வரர் ஆலயத்தில் உண்டியலோ, தட்சணையோ கண்டிப்பாக ஏற்றுக்கொள்வதில்லை.

இவ்வாலய மூர்த்தி சிவலிங்கம். இவ் லிங்கம் பாரத நாட்டின் புனித நர்மதா நதியில் 12 ஆண்டுகள் கடுந்தவம் செய்த பெரும் தவசிரேட்டர்

[5-ம் பக்கம்பார்க்க]

## ★ ஜனாதிபதி தேர்தல்களம்

# "பொருளாதாரநிலை மோசம்; எதிர்க்கட்சிகளிடையே பிளவு; பொது வேட்பாளரை ஆதரிப்போம்"

- சரத்முத்தெட்டுவேகம

[கொழும்பு]

"இந்த அரசாங்கம்தொடர்ந்தும் ஆறு அல்லது பத்து வருடங்களுக்கு பதவியிலிருக்குமானல் மக்கள்பெரும் கஷ்டங்களையேஅனுபவிப்பார்கள். தற்போது உழைக்கும் வர்க்கத்தினர் இந்த அரசாங்கத்தால் பெரும் பாதிப்புக்குள்ளாகி உள்ளார்கள். அத்துடன் எதிர்க்கட்சிகளுக் கிடையேயும் பிளவுகள் தோன்றியுள்ளன. ஆகையினால் நாமெல்லோரும் எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஒரு பொது வேட்பாளரையே ஆதரிப்போம்.

இவ்வாறு இலங்கை கம்யூனிஸ்ட் கட்சிப் பிரமுகரான திரு. சரத் முத்தெட்டுவேகம தெமட்டகொடையில்] நடைபெற்ற கூட்டமொன்றில் உரையாற்றினர். திரு. சரத் முத்தெட்டுவேகம தொடர்ந்து அங்கு பேசுகையில் கூறியதாவது:

"நாட்டின் பொருளாதாரம் இன்று மிகமோசமாகவுள்ளது. இது அடுத்த வருடம் மேலும் மோசமாகவிருக்கும். உலகவங்கியும் அதுவழங்கும் உதவிகளை நிறுத்தவிருக்கின்றது. அத்துடன் எதிர்வரும் வரவுசெலவுத் திட்டம் பெரும் சுமைகளை மக்கள்மீது சுமத்தவுள்ளது. ஆகையினலேயே அரசாங்கம் இத்தகைய நிலைமைகளுக்கு ஆளாகி மக்களின்செல்வாக்கை இழப்பதற்கு முன்பதாக இத்தேர்தலைவைத்து ஆட்சிக் காலத்தை நீடிக்க முற்படுகின்றது.

எனவே மக்கள் முதன்முறையாக இந்த நாட்டில் நடைபெறவிருக்கும் நிறைவேற்று அதிகாரம்கொண்ட ஜனதிபதியைத் தெரிவுசெய்யும் இத்தேர்தலில் மிக அவதானமாக தமது வாக்குகளைப் போடவேண்டும் என்ருர். (கி)

# "போட்டியிடுபவரின் அரசியல் முதிர்ச்சியையும் நிர்வாகத் திறமையையும் எடைபோடவேண்டும்"

- பெஸ்டஸ் பெரேரா

(வென்னப்புவ)

"நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனதிபதிப் பதவியே இந்த நாட்டின் அதி உயர்ந்த பதவியாகும். எனவே மக்கள் இப்பதவிக்கு ஒருவரைத் தெரிவு செய்யும்போது அவரிடம் இருக்கின்ற அரசியல் முதிர்ச்சி, அரசியல் அனுபவம் ஆகியனவற்றையும் நிர்வாகத்திறமையையும் எடைபோடவேண்டும்."

இவ்வாறு மீன்பிடி அமைச்சர் திரு. பெஸ்டஸ் பெரேரா வென்னப்பு தொகுதியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

ஸ்ரீ. ல. சு. கட்சியின் கடந்த ஏழுவருட கால ஆட்சியின் போது ஜனநாயகக் கொள்கைகள் கடைப்பிடிக்கப்படவில்லை. அவசரகாலச் சட்டத்தின்கீழ்சர்வாதிகாரப் போக்கில் ஆட்சிநடை பெற்றது. இந்நிலையில் மீண்டும் 77ல் ஸ்ரீ ல. சு. க. பதவிக்கு வந்திருந்தால் மக்கள் விடுதலை முன்னணியைச் சேர்ந்த பலர் சிறைக்குள் தள்ளப்பட்டிருப்பார்கள்.

ஐக்கியதேசியக்கட்சி மக்களின் சுதந்திரத்தை மதிக்கின்றது. அச்சுதந்திரத்திற்கு ஏற்படக்கூடிய பாதக விளைவுகளையும் தடைசெய்துள்ளது.

ஜனதிபதி ஜெயவர்த்தன இந்த நாட்டின் முதிர்ந்த அரசியல்வாதியாக விளங்குகிருர். ஜனநாயக உரிமைகளுக்காகப் போராடியுள்ளார். கடந்தஐந்து வருடகாலமாக இவரது ஆட்சியின்கீழ் மக்கள் நல்ல வழியில் இட்டுச் செல்லப்பட்டுள்ளனர். எனவே அவரை மீண்டும் பதவியில் அமர்த்த வேண்டும் என்ருர். (கி)

# "மக்கள் விடுதலைமுன்னணி ஆட்சி அமைத்தால் பாராளுமன்ற ஒய்வூதியத்திட்டம் ஒழிக்கப்படும்"

(கொழும்பு

"மக்கள் விடுதலைமுன்னணி பதவிக்கு வந்தால், பாராளுமன்ற உறுப்பினர்களுக்கான ஒய்வூதியத்திட்டம் ஒழிக்கப்படும். இதற்குப் பதிலாக முதியவர்களுக்கான புதிய ஓய்வூதியத்திட்டம் அமுலாக்கப்படடு பதவியிலிருந்து இளைப்பாறியவர்களுக்கும், வேலையற்றிருக்கும் வயோதிபர்களுக்கும் இளைப்பாற்றுச் சம்பளம் வழங்கப்படும்".

இவ்வாறு கோட்டே தொகுதி மக்கள் விடுதலை முன்னணிக் கட்சி அமைப்பாளரான திரு. விதாஞ்சி அத்தொகுதியில் நடைபெற்ற பிரசாரக்கூட்டமொன்றில் உரையாற்றினர். அவர் தொடர்ந்துபேசுகையில் "முன்பு வாக்குறுதிகளுக்கு மதிப்பளித்தே மக்கள் தமது வாக்குகளை அக்கட்சிகளுக்கு வழங்கினர். ஆனல் ம. வி. மு. கட்சி வாக்குறுறுதிகளைமக்கள் முன்வைக்கவில்லை. அதனுடையகொள்கைகளையே முன்வைக்கிறது என்ருர்.

மேலும் அவர் மக்கள் விடுதலை முன்னணி அமைக்கும் ஆட்சியில் அதன் அங்கத்தவர்கள் தமது சொத்துவிபரங்களை மக்கள் முன்னிலையில் சமர்ப்பிப்பார்கள். இதன்மூலம் மக்களால் அவர்களைப்பற்றி நன்கு அறிய முடியும் என்ருர்.

தமது ஆட்சியில் சகல பொருட்களது விலைகளையும் குறைவடையச்செய்வதாகத் தெரிவித்தஅவர்பொருட்களின் விலைகள் எதற்காக பல்வேறுபட்ட விலைகளில் இருக்கின்றதென்பதுகுறித்து ஆராயப்படுமென்றும் தெரிவித்தார். (கி)

## சந்தேகநபர் கைது

[சாவகச்சேரி

எழுதுமட்டுவாள் ஆசைப்பிள்ளை ஏற்றத்திலுள்ள கடையொன்றில் நடந்த கொள்ளை சம்பந்தமாக வத்தளையைச் சேர்ந்த ராசு விக்கினேஸ்வரன் என்பவர் சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி எம். எச். காரியப்பர் முன்னிலையில் ஆஜர் செய்த பொழுது நீதிபதி இந்த மாசம் 27ம் திகதி வரை றிமாண்டில் வைக்கும்படி உத்தரவிட்டார். [ச]

## கல்விளானில்

# துப்பாக்கியுடன் ஒருவர் கைது; கடைகளில் பலத்த சோதனை

(துணுக்காய்)

மாங்குளம் பொலிசார் மேற்கொண்ட திடீர் வேட்டையில் துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

துணுக்காய் பிரிவிலுள்ளகல்விளான் கிராமத்தில் மாங்குளம் பொலிஸ் கோஸ்டியினரின் தீவிர தேடுதலின் பின்பு துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

இவர் பொலிஸ் நிலையம் அழைத்துச் செல்லப்பட்டு தீவிரவிசாரணையின் பின்பு விடுதலை செய்யப்பட்டார்.

அத்துடன் துணுக்காய் மல்லாவி கடை வீதிகளிலுள்ள தனியார் கடைகளில் துப்பாக்கி இருப்பதாக தகவல் கிடைக்கப்பெற்றதால் பல கடைகளும் பொலிசாரின் தீவிர தேடுதலுக்குட்பட்டது.

இத்தேடுதலில் தடையங்கள் எதுவும் அகப்படவில்லை இருந்த போதிலும் பல வாலிபர்கள் விசாரணை செய்யப்பட்டனர். (க)

## யாருடையது?

மோட்டார் சைக்கிள் திறப்புகள் உட்பட 3 திறப்புகளும், மற்றுமெரு திறப்புக் கோர்வை ஒன்றும் தாவடிச் சந்திக்கருகாமையில் கண்டெடுக்கப்பட்டு சுதுமலையைச் சேர்ந்த ஐ சாந்தன் என்பவரால் "ஈழநாடு" காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது' உரியவர் அத்தாட்சி காட்டி பெற்றுக் கொள்ளலாம்.

## காயத்திரி...

(4ம் பக்கத் தொடர்ச்சி)

சிவபாலயோகியால் கண்டெடுக்கப்பட்டு, அவர் தம் திருக்கரங்களால் 1978ம் ஆண்டு நாரளையில்பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டது.

இவ்வாலயத்தில் வாழும் காயத்திரிசித்தர் முருகேசுசுவாமிகள் தம்மைநாடிவருவோர் மீது ஆன்ம தெய்வ காந்த சக்தியைப்பாய்ச்சியும், சமாதியில் இருத்தியும் இறையின்பத்தை அவர்களும் தொட்டு அனுபவிக்கச் செய்துவருகிருர். 3 அடியார்கள் தொடர்ந்து 3 மாதங்கள் இந்நிலையில் இருந்துவருகிருர்கள். 5 வயது சிறுவனும் ஒருநாளைக்கு 20 மணித்தியாலங்கள் தியானத்தில் இருந்து இறைவியாபகத்தில் லயித்து ஆன்ம இன்பத்தை அனுபவிக்கிருர்.

பௌத்த மத பெண்பிள்ளை ஒருவரும் இத்தியானத்தில் இருந்து ஆன்ம இன்பத்தை அனுபவித்து வருகின்ருர். இலங்கையர் மட்டுமின்றிஜெர்மனியர் கூடஇறையின்பத்தில் லயிக்கின்றனர் இங்கு.

பலபாகங்களிலிலுமிருந்தும் மக்கள் கூட்டம் இதைப் பார்ப்பதற்கென்றே இந்த ஆலயத்திற்கு வருகின்ருர்கள் பொதுமக்கள் வியாழக்கிழமைகளிலும், பூரணைத்தினங்களிலுமே சமாதிநிலையைப் பார்க்க அனுமதிக்கப்படுகிருர்கள்.

-உ. பாலரத்தினம்

## பிரிட்டிஷ்...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

### பயணங்கள்

பஸ்களிலோ, ரயில்களிலோ பயணம் செய்யும்போது, வெள்ளைக்காரர்கள் எப்படி நடந்துகொள்கிருர் என்பதைக் கவனித்துக்கொள்ளலாம்.

பத்திரிகை படித்துக்கொண்டிருப்பார்கள், அல்லது எதைப்பற்றியாவது சிந்தித்துக்கொண்டிருப்பார்கள். பக்கத்திலிருப்பவர்களுடன் 'தொண தொண' என அரட்டை அடித்து எல்லாரையும் குழப்பமாட்டார்கள்!

அருகே ஒரு நண்பரோ, மனைவியோ இருந்தால், மிக மெதுவாக காதோடு காதாகப் பேசிக்கொள்வார்கள்! மற்றவர்வர்களுக்குக் கேட்கவே மாட்டாது!

லண்டனிலிருந்து 'மிடில்ஸ்புரே' என்ற இடத்திற்கு அதாவது முன்னூறு மைல் தூரத்திலுள்ள எனது சகோதரி வீட்டுக்குப் பஸ்ஸில் ஒரு தடவை சென்றேன்.

எனக்குப் பக்கத்திலிருந்தவர் வெள்ளைக்காரர்! அப்படிச் சொல்வதைவிட நான் ஒருவன்மட்டும்தான் அந்த பஸ்ஸில் கறுப்பன்.

தனிய பஸ்ஸில ஏழு மணி நேரம் பயணம் செய்வது 'போர்' ஆக இருந்தது.

எனக்குப் பக்கத்திலிருந்தவர் இளைஞர். அவர் எதையோ படித்துக்கொண்டிருந்தார்.

"நீங்கள் எங்கே போகிறீர்கள்?" என்று பேச்சை ஆரம்பிக்க முயன்றேன். அவர் ஏதோசொன்னர், புரியவில்லை!

அவர் முகத்தைப் பார்த்தேன், என்பக்கமே பார்க்கவில்லை! ஒரு கறுத்தவனுக்குப் பக்கத்தில் அமர்ந்து விட்டோமே என்ற வெறுப்புப் போலும் அந்த இளைஞருக்கு!

நான் இறங்கிய இடம் வரும் வரை—அதாவது சுமார் ஏழு மணி நேரம் வரை அந்த இளைஞன் என் பக்கமே பார்க்கவில்லை! சகோதரியிடமும் மைத்துனரிடமும் இதனைச் சொன்னேன். "அவர்கள் அப்படித்தான்! வேண்டுமென்றில்லை! வெள்ளைக்காரன் ஒருவன் பக்கத்தில் இருநதாலும் கதைத்திருக்கமாட்டான்!" என்ருர்கள்.

எனக்கென்ருல் அவர்கள் சொன்ன சமாதானம் சரியாகப் படவில்லை.

## முஸ்லிம் வித்தியாலய புதிய கட்டிட திறப்புவிழா

(யாழ்ப்பாணம்)


யாழ்ப்பாணம் வண்-மேற்கு முஸ்லிம் வித்தியாலயத்தில் அண்மையில் புதிதாக கட்டி முடிக்கப்பட்ட மாடிக் கட்டிடத்தை யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் திரு. வி. யோகேஸ்வரன் சென்ற ஞாயிறு மாலை திறந்துவைத்தார். இவ்வைபவத்தை யொட்டி பாடசாலை அதிபர் ஜனப் எம். ஏ. சி. எம். ஹாலித் தலைமையில் பாடசாலை மாணவி செல்வி ரி. ஜுலியானவின் "கிருஅத்" நிகழ்ச்சியுடன் ஆரம்பமான பொதுக்கூட்டத்தில் பெருந்திரளான மக்கள் பாடசாலை புதிய மாடிக்கட்டிட மண்டபத்தில் பிரசன்னமாயிருந்தார்கள்.

அதிபர் தமது தலைமையுரையில் கட்டிடத்துக்கான அரசாங்க நிதி உதவியை பாடசாலைக்கு ஒதுக்கித்தந்த யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினருக்கும் சகல விதத்திலும் ஒத்துழைப்பு நல்கிய உத்தியோகத்தர்களுக்கும் முஸ்லிம் பெற்ருேர்கள் சார்தல் நன்றி தெரிவித்தார்.

அல்ஹாஜ் என். எம். மீருன் முகிதீன் ஆலிம், யாழ். பிரதம கல்வி அதிகாரி எம். எம். மன்சூர், யாழ். வட்டாரக் கல்வி அதிகாரி பி. சிவஞானசுந்தரம், புங்குடுதீவு கொத்தணிப் பாடசாலை அதிபர் சி. இராசநாயகம், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ். சிவதாசன், கொழும்புத்துறை துரையப்பா மஹா வித்தியாலய முன்னள் அதிபர் ஆர். செல்வராசா, மாநகரசபை உறுப்பினர்களான பாஷா முகிதீன்பிச்சை, கே. எப். சாஹுல் ஹமீது, ஆகியோர் சிறப்புரை நிகழ்த்தினர்

பல ஆண்டுகளின்பின் இப்பாடசாலைக்கு ஒரு புதிய கட்டிடம் அமையப்பெற்றிருப்பது அதிபர் ஜனப் எம். ஏ. சி. எம். ஹாலித்தின் பெரும் முயற்சியே எனக்கூறி அவரைப் பெரிதும் பாராட்டினர்கள் மாணவன் எஸ். சாஜித் கல்வி என்னும் பொருள்பற்றி உரையாற்றினர்

சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்ட வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு எம். சிமியாம்பிள்ளை பாடசாலையில் நிகழ்ந்த மத அறிவுப் போட்டிகளில் வெறியீட்டிய மாணவ, மாணவிகளுக்கு பரிசில்கள் வழங்கினர். ஆசிரியர் ஜனப் ஏ. சி. ஏ. சலாம் நன்றியுரை நிகழ்த்தினர்.



''மாவட்ட அபிவிருத்தியில் அத்தியாவசிய

# தேவைகளுக்காக கூடுதல் நிதி செலவிடப்படுகிறது

## இதனுல் தொகுதிக்குக் குறைவாகவே கிடைக்கும்

### யாழ். மா. ச. தலைவர் கூறுகிறுர்

(கரவெட்டி)

''மாவட்ட அபிவிருத்தியில் கூடுதலான நிதி அத்தியாவசிய தேவைகளுக்காக ஒரு முகமாகச் செலவு செய்யப்பட்டு வருகிறது. இதனுல் எம்.பி. ஒருவர் தனது தொகுதிக்குச் செய்யவேண்டியது குறைவானதாகவே இருக்கும்.''

இவ்வாறு யாழ். மாவட்ட அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. சு. நடராசா கரவெட்டி கிழக்கு நாமகள் சனசமூக நிலையத்தின் புதிய கட்டிடத் திறப்புவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசுகையில் குறிப்பிட்டார்.

சட்டத்தரணி எஸ். செல்லையா தலைமையில் நடந்த இத்திறப்பு விழாவில் அபிவிருத்திச் சபைத் தலைவர் திரு. நடராசா தொடர்ந்து பேசுகையில்:- ''கிராமங்கள் தோறும் பல சனசமூக நிலையங்கள் தோன்றியுள்ளன. தோன்றிக்கொண்டே இருக்கின்றன. இவை அமைக்கப்படுவதன் நோக்கம் கிராமங்கள் அபிவிருத்திஅடையவேண்டும் என்பதற்காகவே.

இன்றைய நிலையில் இப்படியான சனசமூக நிலையம் ஒன்றை அமைப்பதற்கு சுமார் 25 ஆயிரம் ரூபாவரை தேவைப்படுகிறது. மக்களும் அந்தத் தொகையே கேட்கிருர்கள். ஒவ்வொரு கிராமத்திலும் ஒவ்வொரு சனசமூக நிலையம் அமையுமானுல் ஒரு குறிப்பிட்ட சனசமூக நிலையங்களை நிறுவலாம்.

ஆனுல் எங்கள் மத்தியில் இருக்கும் வித்தியாசங்களுக்கு அமைய சனசமூகநிலையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இது வருத்தத்திற்குரிய விடயமாகும். நாம் சூழலுக்குஏற்பத்தான் வாழவேண்டும்.

மாவட்டசபையைப் பொறுத்தமட்டில் மக்களது அபிலாஷைகளுக்கேநாம் முக்கியத்துவம் கொடுக்கின்ருேம். அந்த வகையில் எந்த விஷயத்திற்கு முக்கியத்துவம் கொடுக்க வேண்டுமோ அதற்கே முதலில் பணம்செலவழிக்கப்படுகிறது.

யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை ஒருகட்சிக்குள் இருப்பதால் இம்மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது நிதி முழுவதையும் அபிவிருத்திச்சபைக்கே கொடுத்துவிட்டார்கள். அதனுல் அவர்களது யோசனைப்படியே நாம் நடக்கவேண்டும்.

எமது எம். பீக்களின் நிதியிலிருந்து மாவட்ட தேவையின் முக்கியமான விடயங்கள் முதலில் கவனத்திற்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன. மிகுதி பாராளுமன்ற உறுப்பினரது தொகுதித் தேவைகளுக்குப் பயன்படுத்தப் படுகிறது:

கடந்த ஆண்டு யாழ். மாவட்ட எம். பி.க்கள் மகாதேவா தாம்போதியை ஒப்பேற்ற வேண்டுமென்ற நோக்கத்திற்காக 10 லட்சம் ரூபாவைஒதுக்கினுர்கள். மகாதேவா தாம்போதியை ஒப்பேற்றுவதன் மூலம் யாழ. மாவட்டம் சிறப்படையும்.

அதேபோலதான் யாழ்.ஆஸ்பத்திரியின் சீர்கேட்டையும் உணர்ந்து 250 லட்சம் ரூபா செலவில் நிறுவப்படவுள்ள ஆஸ்பத்திரிக் கட்டிடத்திற்கென முதற்கட்டமாக 50 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

இப்படியாக மாவட்ட அபிவிருத்தியில் கூடுதலான நிதி அத்தியாவசிய தேவைகளுக்காக ஒருமுகமாகச் செலவுசெய்யப்பட்டு வருகிறது. இதனுல் எம். பி. ஒருவர் தனது தொகுதிக்குச் செய்ய வேண்டியது குறைவானதாகவே இருக்கும்.

ஆகவே இப்படியான சனசமூக நிலையங்களைச் சேர்ந்த பகுதியில் வாழும் குடும்பம் ஒவ்வொன்றும் குறைந்தது 10 ரூபா வீதமாகக் கொடுத்து உதவிசெய்து தமது சனசமூக நிலையங்களை வளரச் செய்ய முன்வர வேண்டும். அப்பொழுதுதான் சனசமூகநிலையங்கள் போன்ற பொது ஸ்தாபனங்கள் வளரமுடியும்''

உடுப்பிட்டி எம். பி. திரு. த. இராசலிங்கம் புதிய கட்டிடத்தைத் திறந்துவைத்துப் பேசுகையில் ;-

சனசமூகநிலையங்கள் சமுதாயத்தின் அன்ருட வாழ்க்கையில் முக்கிய இடத்தை வகிக்கின்றன. இந்த வகையில் சனசமூக நிலையங்கள் வெறும் கட்டிடங்களோடு இருந்துவிடாமல் பல்வேறு நோக்கங்களையும் நிறைவேற்றும் வண்ணம் செயற்படவேண்டும்.

இந்த நாட்டு தமிழ் மக்களது பொருளாதார நிலையைப் பொறுத்தமட்டில் கல்வியையே நம்பி முதலீடு செய்த காலம் மலையேறிவிட்டது. இன்று கல்வியினுல் பயன் கிடைக்குமா என்றநிலையிலேயே தமிழ்மக்கள் வாழ்கிருர்கள் அந்தநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளார்கள்.

இன்றைய காலகட்டத்தில் தமிழ் மக்கள் சிறுகைத்தொழில்கள், நடுத்தரக் கைத்தொழில்கள் போன்றவற்றில் முதலீடு செய்து தமது வருவாயைப் பெருக்கி எமது சமூக பொருளாதாரத்தில் மாற்றத்தைக்காண வேண்டும். மறுமலர்ச்சியை ஏற்படுத்த வேண்டும் இந்த மறுமலர்ச்சிக்கு காந்தியடிகள் கூறியதுபோல கீழ் மட்டத்திலிருந்து ஆரம்பித்தால் சகல மக்களையும் எதிர்பார்த்த மாதிரி முன்னேற்றம் அடையச் செய்யலாம்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பேசுகையில் இச்சனசமூகநிலையம் இப்பகுதி மக்களுக்குநல்ல சேவையாற்ற வேண்டும் சனசமூக நிலையத்தின் பிரயோசனத்தை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். அதன்மூலம் கிராமம் முன்னேற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

விழாவில் ஊர்காவற்றுறை மாவட்ட நீதிபதி திரு. ரீ. கே. என். திலகன், யாழ். மாவட்ட அபிவிருத்திச்சபை நெல்லியடி உப அலுவலக செயலாளர் திரு. வ. இராமச்சந்திரன் உட்பட பலர் பேசினுர்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன. (க)

# ''பிள்ளைகளின் ஆளுமையை ஆக்குவதில் பெற்ருேர் பெரும் பங்கு எடுக்கவேண்டும்

## தமது முக்கிய பொறுப்பைத் தட்டிக்கழிக்கலாகாது!''

### பரி. யோவான் கல்லூரி அதிபர் அறிவுரை

(அரியாலை)

''சிந்தனைகள், இலட்சியங்கள், அபிலாசைகள் ஆகியன பிள்ளைகளிடம் இயல்பாகத் தோன்றவேண்டுமென எதிர்பார்க்கமுடியாது. குழந்தை வளர்ப்பில் பெற்ருேர் பொறுமையாகவும், புத்திசாதுரியமுள்ளவராகவும் இருக்கவேண்டும்''.

இவ்வாறு யாழ். பரி. யோவான் கல்லூரியின் வருடாந்த பரிசளிப்பு விழாவில் கல்லூரியின் வருடாந்த அறிக்கையைச்சமர்ப்பித்துப்பேசிய அதிபர் திரு. சீ. ஈ.ஆனந்தராஜன் குறிப்பிட்டார்.

கல்லூரியின் பீற்ருே ஞாபகார்த்த மண்டபத்தில்கல்லூரியின் முகாமையாளரும், யாழ்ப்பாண ஆர்ச்டீக்கனுமாகிய அருட்திரு. சாம். டி. ஹோரார்சிங்டன் அடிகளார் தலைமையில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கல்லூரி அதிபர் தொடர்ந்து பேசுகையில்குறிப்பிட்டதாவது: மாணவனெருவனின் குணதிசயங்களையும், ஆளுமையையும் விருத்திசெய்வதில் பாடசாலைகள் பெரும் பங்கு வகிக்கின்றன. எமது கல்லூரி மாணவரது பலவகையான ஆளுமைகளை விருத்தி செய்யும் நோக்குடன் பல சந்தர்ப்பங்களையும், செயற்பாடுகளையும் ஏற்படுத்தியுள்ளது. இவற்றை மாணவர் தம் கல்லூரி வாழ்வில் பயன்படுத்தி நன்மைபெறப் பெற்ருேர் ஊக்குவித்தல் வேண்டும்.

மாணவரின் ஆளுமையை ஆக்குதலிலும் வளம்படுத்துதலிலும் பெற்ருேரின் பங்கு மிக முக்கியமானதாகும். பல பெற்ருேர் தமது ஆத்மீக அறப்பாரம்பரியத்தை மற்ருேரிடம் கொடுத்துவிட்டு தமது முக்கிய பொறுப்பிலிருந்து ஒதுங்கிக் கொள்ளுகின்றனர். பெற்ருேருக்கீடாகஇன்னெருவர்இருக்க முடியாதென அறிஞர்கள் கூறுகின்றனர்.

பிள்ளைகளின் குணதிசய விருத்திக்கு பாடசாலைகள் போன்ற நிறுவனங்கள் ஓரளவு உதவமுடியுமே தவிர குணதிசயங்களைத் தோற்றுவிப்பதில் பெற்ருேரே முக்கியகாரணிகளாவர். உதாரணமாகவழமையாகக் காலம் தாழ்த்தி வருபவரை அல்லது வீட்டு வேலைகளைச் செய்யாதவரை அல்லது பெறுமதிமிக்க தன் பொருட்களை தொலைக்கும் ஒருவரைப் பெற்ருேர் பாடசாலைவிடுதிக்கு அவை தம்பிள்ளையைத்திருத்த உதவும் என்ற நம்பிக்கையில் அனுப்பி வைக்கலாம். அப்படிப்பட்ட பெற்ருேர் தமது பொறுப்பை தாம் மதிப்பீடு செய்தவராவர். ''பாசறை''யிலிருந்து திரும்பி ஒரு பிள்ளை வீட்டுக்குத் திரும்பியதும் தன் பெற்ருேரின் ஆதரிப்பை எதற்கும் எதிர்பார்ப்பானேயாகின் அப்பிள்ளைகளுக்கு உலகில் எப்பாசறையும் எவ்விதபயனையும் அளிக்காது என சாரணிய உயரதிகாரியொருவர் கூறியமை ஈண்டு அவதானிக்கத்தக்கது.

நேர்மைக் குணமும் இது போன்றதே வீடுகளில் முரண்பட்ட பெறுமானம் காணப்படும் போது பாடசாலைகளில் மாணவருக்கு நேர்மைக் குணத்தை ஊட்டமுடியாது. நியூயோர்க் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த கலாநிதி கோவாட்லேன் என்பவர் மாணவர் வகுப்பறைகளில் கைக்கொள்ளும் ஏமாற்று வித்தைகளைப்பற்றி ஆராய்ந்தார். ஒவ்வொரு மாணவனும் எழுதிய விடைகளை அவர்களைக் கொண்டே திருத்துவித்தார். பின் விடைகள் மாற்றப்பட்டனவா எனப்பார்த்தார். மத்திய வகுப்பைச் சேர்ந்த நல்ல குடும்பங்களிலிருந்து வந்த பல பிள்ளைகள் ஏமாற்றுவித்தைகளைக் கூடுதலாக கையாண்டதை அவர் கண்டார். காரணம்; நல்ல குடும்பங்களில் நேர்மை வாய்ப்பேச்சளவிலும் வாழ்க்கையின் வெற்றியே இலட்சியமாகவும் காணப்பட்டது. தங்களது குறிக்கோளை அடையப் பெற்ருேர் பொய் சொல்வதையும் தாம் விரும்பாதவர்களை முகமன் கூறி வரவேற்றுப் புகழ்வதையும் இப்பிள்ளைகள் தங்கள் வீடுகளில் நிகழ்வதைக் கண்டுள்ளனர். இவை போன்ற பெற்ருேரின் செயல்கள் பிள்ளைகளிடம் தீங்கேற்படுத்தக்கூடிய தாக்கங்களைக் கொடுக்கும்.

பெற்ருேர் வெளிப்படுத்தும் மனுேநிலைகள் பிள்ளைகள் மத்தியில் மக்களை நேசிக்கும். அல்லது வெறுக்கும் இயல்பினைத் தோற்றுவிக்கும் என்பதை மனுேதத்துவ நிபுணர்கள் ஏற்றுள்ளனர், பொறுமையற்ற திடீரெனக் கோபங்கொள்ளும் அல்லது பிள்ளைகளுடன் சிறிது நேரத்தைக் கழிக்காத சுறுசுறுப்பு மிகுந்த பெற்ருேர் மணல்கொண்டு ஒழுக்கம் கற்பிக்க முயல்கின்றனர்.

பெற்ருேர் மீது கொண்ட பாசமே பெற்ருேரின் நற்குணங்களை தாம் பின்பற்றவும் போதிக்கப்படும் நல்லொழுக்கங்களைக் கடைப்பிடிக்கவும் உதவும். சீரிய பண்புகளான கருணை, தயாள சிந்தனை, தியாகமனப்பான்மை போன்றன பிள்ளைகள் மத்தியில் தோன்றுவதற்கு பெற்ருேரின் பாசமே தூண்டுதலாக அமையும். இதே போன்று துணிவு என்றும் உயரிய குணத்தையும் பிள்ளைகளுக்குப் போதிக்க பெற்ருேர் தயங்கக் கூடாது. பிரச்னைகளையும், புதிய சூழ்நிலைகளையும் எதிர்நோக்கி வெற்றிகாண பெற்ருேர் உதவவேண்டும். இத்தன்மைகளை வலியுறுத்திப் போதித்து வளர்க்கமுடியாது. கலாநிதி எம். ருெபேர்ட் கொம்பேர்க் இதுபற்றிக் குறிப்பிடுகையில் ''பிள்ளை ஒன்று தன்னைப்பற்றிய எண்ணத்திலும் தன்னைத்தான் மதிப்பிடுதலிலும், தனக்குத்தான் அளிக்கும் மதிப்பிலுமே உண்மையான துணிவு தோன்றுகின்றது. மிகச்சிறியவன் இளமையுள்ளவன் பேதமை கொண்டவன் என்ற மனநிலையில் வளர்ந்துவரும் ஒருவன் துணிவினை வளர்க்க மாட்டான்.

குடும்பங்களை ஆராய்ந்த சமூகவியலாளரான கலாநிதி றே. பாபா என்பவர் குடும்பத்தீர்மானங்களை எடுக்கும் பொழுது பிள்ளைகளையும் கலந்தாலோசிக்கவேண்டு மென்கிறுர். இதுபிள்ளைகளின் பொறுப்புணர்ச் யைவளர்க்க உதவும். நல்லபெற்ருேராக வாழ்வதற்கு பலவழிகள் உள. நவீன வாழ்க்கை முறைதரும் பிரச்சனைகளுடன் பெற்ருேரின்நிலை அறிவற்ற முயற்சித் தொழிற்பாடென நாம் கருதக்கூடாது. முக்கியமான ஆக்க வேலைக்குக் கொடுக்கும் முயற்சி போன்று இப்பிரச்னையை நாம் அணுக வேண்டும். முடிவு மிக்கவெகு மதியுள்ளதாக அமைவதோடு

(7-ம் பக்கம் பார்க்க)

உங்கள் சுபீட்சத்திற்கு வழிகாட்டி

நம்பிக்கை - நாணயம் - அனுபவம்

முதலீட்டிற்கு இவை உத்தரவாதம்

ஷப்ரு யூனிகோ பினன்ஸ் லிமிட்டெட்

நிதி ரீதியான உதவிகள்:

- உங்களுக்கு வர்த்தக விவசாயத் துறையிலும், வாகனங்களையும் உபகரணங்களையும் கொள்வனவு செய்ய உதவும் விதமாகவும் வாடகை கொள்வனவு நிதி உதவி வழங்கியும்
- வீடமைப்பு, விவசாயம், கைத்தொழில், ஏற்றுமதி இறக்குமதி வியாபாரம் ஆகியவற்றிற்கு நிதி ஏற்பாடுகள் செய்துகொடுத்தும்
- நீங்கள் விற்கவிருக்கும் காணிகள், வீடு வளவுகள் ஆகியவற்றை எதுவித சிரமமின்றி நிதானமாக நல்ல விலைக்கு விற்றுத் தருவோம்.
- ரி. வி. (கலர்), குளிர்சாதனப் பெட்டிகள், மின்விசிறிகள், மோட்டார் சைக்கிள்கள் முதலியன உடன் விலைக்கும் அல்லது தவணைமுறை அடிப்படையிலும் பெற்றுக்கொள்ள வசதியுண்டு.

வேறும் தேவைகள் எதுவானுலும் எப்பொழுதும் கலந்து ஆலோசிக்க எம்மிடம் வாருங்கள்

SHABRA UNICO FINANCE LTD.

(இலங்கை மத்தியவங்கியின் அனுமதிபெற்ற ஸ்தாபனம்)

தலைமை அலுவலகம்:
61, நியூ புலர்ஸ் வீதி,
கொழும்பு - 4.
தொலைபேசி: 589310

யாழ்ப்பாண காரியாலயம்
207, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

## பிள்ளைகளின்...

[6-ம் பக்கத் தொடர்ச்சி]
இதனுலேற்படும் மகிழ்ச்சியை நாம் வெறென்றேடும் ஒப்பிட முடியாது என்று குறிப்பிட்டார்.

பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வைத்தியகலாநிதி ஏ. வி. ஏ, வேதநாயகம் பரிசளிப்பு உரையை நிகழ்த்திஞர். திருமதி பத்மினி வேதநாயகம் பரிசில்கள் வழங்கிஞர். பழையமாணர்கள் சார்பில் திரு. எஸ்.எம்.வி. திசைநாயகம் நன்றியுரையைப் பிரேரிக்க ஆசிரியர் திரு. யே. அமலசீலன் ஆமோதித்தார்.

ஹரன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சரத்பாபு – சுபாஷினி
நெஞ்சத்தை கிள்ளாதே
(கலர்)

ராஜா (யாழ். நகர்)
4 காட்சிகள்
பிரதாப்-ராதிகா
வசந்தத்தில் ஒரு வானவில்
(ஈஸ்ட்மன் கலர்)

வெஸ்லி (மானிப்பாய்)
தினசரி: 6-15, 9-30
சனி, ஞாயிறு 2-30
ஞானக்குழந்தை

வெலிங்டன்
[யாழ்ப்பாணம்]
தினசரி 4 காட்சிகள்
ஆயிரம்வாசல் இதயம்

லிடோ
[யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2-15, 4-45, 7-15, 9-30
DEATH DIAMENTIoN

சாந்தி (யாழ்நகர்) போன்: 23642
19 — 21 Daily 5 Shows
Terence Hill
Mr. Billion
(Color)
Action Packed

றீகல் (யாழ்.நகர்)
தினசரி 10-30, 2-30, 6-15, 9-30
ரஜனிகாந்த் — ரதி, ஜெய்சங்கர்
முரட்டுக் காளை
(கலர்)

ஸ்ரீதர் (யாழ்.நகர்) தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர்-மஞ்சுளா-லதா
நேற்று இன்று நாளை
எமது அடுத்த வெளியீடு
நம் நாடு

ராணி (யாழ் நகர்) இன்று 79வது தினம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-சுஜாதா-ஸ்ரீதேவி
விஸ்வரூபம்
[ஈஸ்ட்மன் கலர்]

மனோகரா (யாழ்ப்பாணம்)
10-30, 2-15, 4-45, 7-15, 9-30
WANG YU in
BLOOD OF THE DRAGON
(Scope—Color—Karate Film)

5-வது மகளிர் வாரம்
வின்ஸர் (யாழ்.நகர்)
தினசரி 4 காட்சிகள்
✶ சந்திரசேகர் ✶ சுபாஷினி ✶ ராஜீவ்
பாலைவனச்சோலை
விரைவில்: வசந்தமாளிகை
சிவாஜி, வாணிஸ்ரீ
இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட புதிய பிரதி

## வடஇலங்கை சங்கீதசபை பரீட்சை முடிவுகள்

(யாழ்ப்பாணம்)
வட இலங்கை சங்கீதசபை நடாத்திய 7-ம் ஆண்டு மிருதங்கம், நடனம், (பரதம், கதகளி) பண் இசை, நாடகம் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன. இப்பெறுபேறுகள் தொடர்ந்து 'ஈழநாடு' இதழில் வெளிவரும். நடனம் — பரதம் முடிவுகள் இங்கு தரப்படுகின்றன.

### நடனம்-பரதம்
### சாவகச்சேரி
### இரண்டாம் பகுதி
#### இரண்டாம் பிரிவு

பரதம்: விஜயலதா சபாரட்னம், பவானி சோமசுந்தரம், ஜெயந்தி கனகரட்டினம், அனுசாந்தினி கந்தையா.

#### சாதாரணசித்தி

பரதம்: உதயவஜனி மயில்வாகனம், சுகந்தி யோகநாதன், விஜயகுமாரி விஜயரத்தினம், ரூபசாந்தா மகேஸ்பரன், மஞ்சுளா சிவஞானம், தேவகி சிவபாதசுந்தரம், குமுதினி நாகராஜா, தேவகி நடராஜா, வாசுகி சிவபாதசுந்தரம்.

### வவுனியா
#### முதலாம்பிரிவு

பரதம்: அனுசூயா நவரட்னம்.

#### இரண்டாம்பிரிவு

பரதம்: கலைவதனி தேவராசா. துஷ்யந்தி கதிரவேலு, உடுமேஸ் பஞ்சாட்சரம், மங்களராணி மங்களேஸ்வரன்.

### கொழும்பு
### முதலாம் பகுதி
#### முதலாம் பிரிவு

பரதம்: f மலர்விழி மகாலிங்கம், f சாந்தி கருப்பையா, f சசிகலா இரத்தினசிங்கம், டெய்சி வி. ராஜன், சியாமளா முத்துராஜா. இராஜ்ஜயந்தி இராஜ்குமார், உஷாந்தினி துரைராஜா, ஷாந்தாலக்ஷ்மி நடராசா.

#### இரண்டாம்பிரிவு

பரதம்: அபிராமி விசுவநாதன், சித்திரா சொக்கலிங்கம், கலிஸ்ரா சுதாமதி யோசவ்.

#### சாதாரணசித்தி

பரதம்: நளாயினி சண்முகராசா, அருந்ததி கயிலாசபிள்ளை, சிவதரிசனி சிவசுப்பிரமணியம், யோவானி யோசப்.

### திருகோணமலை
### மூன்றும் பகுதி
#### சாதாரணசித்தி

பரதம்: ஜெயபவானி விநாயகராஜா.

### மட்டக்களப்பு
#### முதலாம் பிரிவு

பரதம்: f சாமிலா அருணகிரிநாதன்.

### யாழ்ப்பாணம்
#### முதலாம் பிரிவு

பரதம்: f சலாமதி சுந்தரமூர்த்தி, f திலகசக்தி முத்துக்குமாரசாமி, f நந்தினி நடராஜா, f தமயந்தி பரம்தில்லைராஜா, ஞானமொழி யோகநாதன், பாமதி ஜெகநாதன், கார்த்திகா பத்மநாதன், சுஜீவி மகாதேவன்.

#### இரண்டாம் பிரிவு

பரதம்: நாகேஸ்வரி மாலதி சூரிய நாராயண பிள்ளை, அஜந்தா சதாசிவம், ஜறீன் லக்ஷ்மி சிறில், துஷ்யந்தி தெய்வேந்திரன், மரீன் வசந்தினி பங்கிறேஷியஸ், f றேணுகாவதி, ஜெயசிங், f துஷ்யந்தி பாலசிங்கம், ஷோபனு கந்தசாமி.

#### சாதாரணசித்தி

பரதம்: யுகதா செல்வநாயகம், பற்றிசியா யோசவ்வின் நீக்கிலாப்பிள்ளை, பத்மதேவி செல்வநாயகம், f நிர்மலா தர்மரத்தினம்.

### நல்லூர்
### முதலாம் பகுதி
#### இரண்டாம்பிரிவு

பரதம்: f சுரேக்கா நவரத்தினம், மைதிலி அம்பலவாணர், யசோதா துரைச்சாமி, தாரணி செல்வராணி.

#### சாதாரணசித்தி

பரதம்; கௌரிமாலா தேவராசா, அமிர்தவர்ஷனி பாலசிங்கம்.

### மானிப்பாய்
#### முதலாம்பிரிவு

பரதம்: f நர்மதா அய்யாக்கண்ணுதேசிகர், f சியாமளா தேவி குமாரசாமி.

#### இரண்டாம்பிரிவு

பரதம்: ரேகினி பரராஜசிங்கம், மாலினி பரராஜசிங்கம், லியோனு அருந்ததி அந்தோனிப்பிள்ளை, அம்பிகா அருணுசலம், மீனு அருணுசலம், மாதினி வைரவநாதன, சாந்தினி ஐயாத்துரை.

#### சாதாரணசித்தி

பரதம்: அனுசியா நடராசா. ஞானசுந்தரி சிவஞானம், மதிவாணி வைரமுத்து.

(தொடரும்)

## நகை மோசடி வழக்கு:
# "4 பவுண் சங்கிலியையும் காப்பையும் கொடுத்தேன்"

(சாவகச்சேரி)
"எதிரி எனது சகோதரன், சம்பவ தினம் நானும் எதிரியும், மந்துவிலில் உள்ள தாயார் வீட்டில் இருந்தோம். குடிபுகல் வீட்டிற்குச் செல்வதற்காக எனது நகையைத் தரும்படி கேட்டார். 4 பவுண் பெறுமதியுள்ள எனது சங்கிலியும் இரண்டேகால் பவுண் பெறுமதியான காப்பையும் கொடுத்தேன்.

நகைமோசடி வழக்கில் சாட்சியமளிக்கையில் மந்துவிலைச் சேர்ந்த இராசதுரை வள்ளிமுத்து மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் நீதிபதி எம். எம். காரியப்பர் முன்னிலையில் எடுத்துக் கொள்ளப்பட்டது.

இவ்வழக்கில் 79 மார்ச் 19ல் மந்துவிலைச் சேர்ந்த இராசதுரை வள்ளிமுத்து என்பவரிடம் 12,000 ரூபா பெறுமதியான சங்கிலி காப்பை மோசடி செய்ததாக அவாது சகோதரன்மீது குற்றம் சாட்டப்பட்டிருந்தது எதிரி சார்பில் சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கம் ஆஜராஞர். தொடர்ந்து சாட்சியமளிக்கையில் வள்ளிமுத்து கூறியாதாவது: சிலநாட்களாக எதிரியிடம் சென்று நகைகளைக் கேட்டேன். அப்போது அவர் ஒரு தேவைக்கு அடகு வைத்துவிட்டேன் விரைவில் எடுத்துத்தருகிறேன் என்றுர். பின்னர் சில காலம் கழித்துப் போய் கேட்டேன். தரமுடியாது நீ அறிந்ததைப்பார் என்றுர் அதன் பின்பு நான் பொலிசில் முறைப்பாடு கொடுத்தேன். எதிரி தரப்புச் சட்டத்தரணி எஸ். ஜெயசிங்கத்தின் குறுக்கு விசாரணைக்கு பதில் அளிக்கையில், சாட்சி கூறியதாவது: நான் தற்போது வவுனிக் குளத்தில் வசித்துவருகிறேன். சம்பதினம் மந்துவிலில் இருந்தேன். எனது கணவன் வழக்கொன்றில் விளக்க மறியலில் இருந்தது உண்மைதான். எனது கணவர் நகைமோசடி செய்ததாக கிளிநொச்சியில் வழக்கு நடைபெறவில்லை.

"77ம் ஆண்டு ஒருமுறை இந்த நகைகளை அடகு வைத்தேன் 76ல் வைத்து 77ல் மீட்டேன், வட்டிக்காக எவ்வளவு கொடுத்தது என்பது ஞாபகமில்லை 900ரூபாவுக்கு அடகு வைத்தேன். பொலிஸ்முறைப்பாட்டில் அடகு வைத்த விபரம் கூறவில்லை பக்கத்துவீட்டு சரஸ்வதியிடம் நகையை வாங்கித்தரும்படி கேட்கவில்லை. தம்பி எங்கள் விருப்பத்திற்கு மாருக விவாகம் செய்தபடியால் நாங்கள் ஒருவரும் கல்யாண வீட்டிற்குப் போகவில்லை. எனக்கும் எதிரிக்கும் எந்தவித கோபதாபமும் இல்லை.

நீதிபதி எம். எச்.காரியப்பர் நவம்பர் மாதம் 9ம் திகதிவரை விசாரணையை ஒத்திவைத்தார். (க)

## கூட்டுறவு மாணவர் கல்விச்சுற்றுலா

(துணுக்காய்)
வவனியா கூட்டுறவுக் கல்லூரி மாணவர்களும், விரிவுரையாளர்களும் கல்விச் சுற்றுலாவை மேற்கொள்ள விருக்கின்றனர். திருகோணமலை, மட்டக்களப்பு, கண்டி, நுவரெலியா, பொல்கொல்லை ஆகிய இடங்களிலுள்ள பலதரப்பட்ட கூட்டுறவு நிறுவனங்களை பார்வையிடுவதுடன் திருகோணமலை, கல்முனை, மட்டக்களப்பு கூட்டுறவு கல்லூரிகளுடன் பலதரப்பட்ட போட்டிகளிலும் கலந்து கொள்ளவிருக்கின்றனர்.

இச்சுற்றுலாவில் சுமார் ஐம்பது மாணவர்கள் பங்கு கொள்ளவிருப்பதாக கூட்டுறவுக்கல்லூரி மாணவர் அவைத் தலைவர்: திரு. பொன். தங்கராசா தெரிவித்தார்.

(க-வெ)

(மன்னர்)
பேசாலை வளர்கலை மன்றத்தின் 7வது ஆண்டு நிறைவு விழா நவம்பர் 13, 14ம் திகதிகளில் கொண்டாடப்படும்.

இவ்விழாவை முன்னிட்டு மன்னர்தீவு மட்டத்தில் நாடகம், பேச்சு, வில்லுப்பாட்டு, தனிநடனம், குழு நடனம், தனிபாட்டு, போன்ற பல போட்டி நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

காரைநகர் ப. நோ. கூ. சங்கம்
வெற்றுச்சாக்கு கேள்விப்பத்திரம் அறிவித்தல்

1500 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திர மூலம் விற்பனைக்குண்டு 28–9–82 செவ்வாய்க்கிழமை நண்பகல் 12-00 மணி வரை கேள்விப்பத்திர விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும். மீளப் பெறும் வைப்புப்பணமாக ரூபா 250/- உம் செலுத்தவேண்டும். நிபந்தனைகளையும் விபரங்களையும் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம். கேள்விப் பத்திரங்கள் யாவும் தலைவர் ப. நோ. கூ சங்கம் காரைநகர் என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். இக் கேள்விப்பத்திரம் சங்கத்தால் நிராகரிப்பதற் உரிமையுண்டு.

குறிப்பு:-
காரியாலயத்தில் ரூபா 2/- செலுத்தி கேள்விப்பத்திரம் பெற்றுக் கொள்ளலாம்.

தலைவர்
ப. நோ. கூ. சங்கம்
காரைநகர்.
82-5-27 4572

SPOKEN ENGLISH
G. C. E. O/L Dec. 1982
புதிய வகுப்புகள் ஆரம்பம்
By S. B. IYAR
பகல் நேர வகுப்புகள்
திங்கள் 8-30 — 10-30 புதன் 8-30 — 10-30
இரவு நேர வகுப்புகள்
திங்கள் 6-30 — 8-30 செவ்வாய் 6-30 — 8-30
ஆரம்பம் 20-9-82
12 (36) வைமன் வீதி, நல்லூர்.
(4570)

# யாழ்; சுன்னுகம் கொள்ளைகள் துப்புகள் துலங்குகின்றன!

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சுன்னுகம் பொலிஸ்பகுதியில் அண்மைக் காலங்களில் வீடுகளில் நடைபெற்ற கொள்ளை, வழிப்பறிக் கொள்ளைச் சம்பவங்களின் துப்புக்கள் துலங்கத் தொடங்கியுள்ளன. இக்கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டுவந்த ஒரு கோஷ்டியினரில் அதிகமானேரை பொலிசார் கைதுசெய்துள்ளதுடன், கொள்ளை அடிக்கப்பட்ட பொருட்களையும் மீட்டுவருகின்றனர்.

கடந்தமாதம் உரும்பராயிலுள்ள 'ஒடு'க்கு நகை செய்துகொடுக்கும் சதாசிவம் என்பவரிடமிருந்து வழியில் வைத்து கொள்ளையடிக்கப்பட்ட 55,105 ரூபா பெறுமதியான நகைகளின் ஒருபகுதியை சுன்னுகம் பொலிசார் யாழ். நகரிலுள்ள நகைக்கடை ஒன்றிலிருந்து மீட்டுள்ளனர்.

இக்கொள்ளை சம்பந்தமாக, கிளிநொச்சி உதய நகரில் வசித்துவந்த துரைசாமிப் பிள்ளை கந்தையா 24 வயது) கோண்டாவில் வடக்கைச் சேர்ந்த ராசையா நவரத்தினம் (28 வயது ஆகிய இருவரையும், சுன்னுகம் பொலிஸ் நிலையப்பொறுப்பதிகாரி திரு. பொன். சுகுணேந்திரனின் பணிப்பின்பேரில் சென்ற சார்ஜன்ட்டுகள் எஸ். துரைசிங்கம், எஸ். சிவலிங்கம் கான்ஸ்டபிள்கள் இ. கந்தசாமி, இரட்ணராஜா ஆகியோர் நள்ளிரவில் வைத்து மடக்கிப்பிடித்துள்ளனர்.

கிளிநொச்சியில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட உரும்பராய் ஆனந்தன் குழுவினர் நடத்தியதாகக் கூறப்படும் கொள்ளைச் சம்பவங்கள் சிலவற்றில் மேற்கூறிப்பிட்ட இருவருக்கும் தொடர்பிருப்பதாகப் பொலிசார் சந்தேகிக்கின்றனர்.

இக்கோஷ்டியினரை சேர்ந்த இன்னும் சிலர் விரைவில்கைது செய்யப்பட்டு விடுவரென்றும், இதனுல் இப்பகுதியில் இதுவரைகாலமும் நடைபெற்றுவந்த கொள்ளைச் சம்பவங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுவிடுமென்றும் இதற்குப் பொதுமக்களும் ஒத்துழைக்கவேண்டுமென்றும் சுன்னுகம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பொன். சுகுணேந்திரன் தெரிவித்துள்ளார். (மா)

இலங்கை இந்திய டெஸ்ட்

# இந்திய அணி: ஒரு விக்கட் இழப்புக்கு 251 ஓட்டங்கள்

சென்னை செப். 17

சென்னை சேப்பாக்கம் 'சிதம்பரம்' ஸ்ரேடியத்தில் நடைபெற்றுவரும் இலங்கை—இந்திய கிரிக்கெட்டெஸ்ட் பந்தயத்தின் இரண்டாவது நாளான நேற்று, இந்திய அணி ஆட்டமுடிவின்போது ஒரு விக்கட் நட்டத்துக்கு 251 ஓட்டங்களைப்பெற்றது.

இந்திய அணியின் காப்டனை சுனில் கவாஸ்கர் 122ஓட்டங்களைப்பெற்று ஆட்டமிழக்காதிருக்கின்றுர். இவர்பெற்ற இந்த செஞ்சரி 79வது டெஸ்ட் பந்தயமொன்றில் பெற்ற 25வது செஞ்சரியாகும்.

இந்திய அணி இழந்த விக்கட்டுக்குரியவர் அருண்லால் ஆவார். இந்தியஅணிக்குபுதியவரான இவர், எடுத்த ஓட்டங்களில் எண்ணிக்கை 63 தற்போது வெங்கசாகர் 39 ஓட்டங்களுடன்கவாஸ்கரோடு ஆடிக்கொண்டிருக்கிறுர்.

இலங்கை அணி தனது முதலாவது இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து 346 ஓட்டங்களைப் பெற்றது. (கி)

ஜனுதிபதி தேர்தலில் இலட்சியம் நிறைவேறினுல்

# தமிழீழ அரச நிர்ணயசபை; குமார் நிறுவுவாராம்!

(கொழும்பு)

"ஜனுதிபதி தேர்தலில் நான் முன்வைத்த கொள்கைக்கு வெற்றி கிடைக்கும் பட்சத்தில் அதாவது பத்து லட்சம் வாக்குகள் கிடைத்தால் வடக்கில் அல்லது கிழக்கில் தமிழீழ அரசாங்க நிர்ணய சபை ஒன்றை நிறுவுவேன்".

இவ்வாறு ஜனுதிபதி தேர்தலில் போட்டி யிடும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் வேட்பாளர் திரு, குமார் பொன்னம்பலம் (தமிழ்காங்கிரஸின் கொழும்புக் கிளைக்கூட்டத்தில் உரையாற்றுகையில் கூறினுர்.

கிளைத்தலைவர் திரு. இ. டபிள்யூ. தேவராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. குமார் பொன்னம்பலம் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

"இத்தேர்தலை தமிழ் ஈழத்திற்கான சர்வஜன வாக்கெடுப்பாகப் பயன்படுத்தும்படி தமிழ் மக்களை கேட்டுக் கொள்கிறேன். இதனை நான் கட்சி ரீதியில் கேட்கவில்லை. ஒரு தமிழ்மகன் என்ற ரீதியில் கேட்கிறேன்.

"தமிழ் ஈழக்கொள்கையைத் தமிழ் மக்கள் கைவிட்டு விட்டார்களா என்று சிங்கள மக்கள் கேட்கிருர்கள். தமிழ் மக்கள் இக்கொள்கையைக் கைவிட வில்லை யென்பதை அவர்களுக்கு எடுத்துக் காட்டுவதற்காகவே நான் இத்தேர்தலில் போட்டியிடுகிறேன்.

"நான் இத்தேர்தலில் போட்டியிடுவது பற்றி திரு. தொண்டமான் தவருன கருத்துக்களைத் தெரிவித்துள்ளார்.

"1948 – ம்ஆண்டு இலங்கை குடியுரிமைச்சட்டத்தின் மூலம் இந்திய மக்களின் வாக்குரிமையை ஐ தே. கட்சி அரசாங்கம் பறித்ததை திரு. தொண்டமான் மறந்து விட்டாரா? அப்படிப்பட்ட ஐ. தே. கட்சியையே தொண்டமான் இன்று ஆதரிக்கின்றுர்.

"இன்று ஜனுதிபதி தேர்தலில் போட்டியிடும் திரு. ஜே. ஆர். ஜெயவர்த்தனுவும் இந்தியமக்களின் வாக்குரிமையைப் பறித்த ஐ. தே. கட்சி அரசாங்கத்தில் அன்று அங்கம் வகித்தார்' என்றுர். (இ–வெ)

## மரக்கடத்தல் வழக்கு: டிராக்டர் பறிமுதல்; சாரதிக்கு அபராதம்!

(சாவகச்சேரி)

சட்டவிரோதமாக அனுமதிப் பத்திரமில்லாது 2, 300 ரூபா பெறுமதியான 5 நாவல் மரங்களை ஏற்றிச்சென்ற உழவு யந்திரம் பறிமுதல் செய்யப்பட்டது,

இவ்வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றில் நீதிபதி எம். எச். காரியப்பர்முன்னிலையில் விசாரணைக்கெடுத்துக் கொள்ளப்பட்டது.

ட்ராக்டர் சாரதி சின்னத்தம்பி விநாசித்தம்பிக்கு 750 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது. அதே ட்ராக்டரில் பிரயாணம் செய்த முருகன் பசுபதிபிள்ளை, கிருஷ்ணபிள்ளை கந்தசாமி என்போர் விடுதலை செய்யப்பட்டனர்.

சாவகச்சேரிப் பொலிசார் வாகனத்தைப் பறிமுதல் செய்யவேண்டுமென்று கோரியதையடுத்து வாகன உரிமையாளர் வே. க. கந்தசாமிக்கு எதிராக விசாரணை நடைபெற்றது.

வைரமுத்துவும், சாரதி சின்னப்பு விநாசித்தம்பியும் சாட்சியமளித்தனர்.

நீதிபதி தமது தீர்ப்பில் வாகன உரிமையாளரும் இக்கடத்தலில் சம்பந்தப்பட்டதாக மன்று கருதுவதால் வாகனம் பறிமுதல் செய்யப்படுவதாகத் தெரிவித்தார்.

ஷர்மிளா என்டர்டெயின்மென்ட்ஸ்
லெட்சுமி ஜூவலர்ஸ் இணைந்து அளிக்கும்
தென்இந்திய திரைப்பட புகழ் நாட்டியமணி
ஜெயமாலா வுடன்
மஞ்சுளா, மணிமாலா, விமலா, ராஜி
மற்றும் பலரின் நடன இசை நிகழ்ச்சி
● பரத நாட்டியம் ● குறத்தி நடனம்
● பாம்பு நடனம் ● அராபிய நடனம்
● கவர்ச்சி நடனம்
இன்னும் பலவும் மெல்லிசைப் பாடல்களும் கொண்ட
இதுவரை கண்டிராத புதுமை நிகழ்ச்சி
செப்ரெம்பர் 21, 22, 23 திகதிகளில்
மாலை 6-30 மணிக்கு
யாழ். வீரசிங்கம் மண்டபத்தில்
டிக்கெற் கிடைக்கும் இடங்கள்:
● வீனஸ் றேடியோ வாச்வேக்ஸ், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
● விமாகி, 27/3, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.
● றிக்கோ சுவீற்ஸ் அன் கிறீம் கவுஸ், 370. ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
● சிவராசா அன் கொம்பனி, பஸ் ஸ்ரான்ட், பருத்தித்துறை.
● லக்னி வாசா, 16, 2–ம் குறுக்கு வீதி, நல்லூர்.
4581

### கூட்டணி நிலை

[1ம் பக்கத் தொடர்ச்சி]

பி நியமனம் குறித்து ஆலோசனை நடாத்தியபோதிலும், இம்மாதம் 21ம் திகதி செவ்வாய்க்கிழமை கொழும்பில் கூடி முடிவுசெய்வதெனத் தெரிவித்துள்ளனர். [மா]

★ ஜனுதிபதி தேர்தலில்

# கொப்பேகடுவவுக்கு கம். கட்சி ஆதரவு

(கொழும்பு)

எதிர்வரும் அக்டோபர் மாதம் 20ந் திகதி நடைபெறவுள்ள ஜனுதிபதி தேர்தலில் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி சார்பில் போட்டியிடும் திரு ஹெக்டர்கொப்பேகடுவவை ஆதரிப்பதெனஇலங்கைக்கம்யூனிஸ்ட் கட்சியின் மத்தியகுழு திர்மானித்துள்ளது.

இதுதொடர்பாக இக்கட்சி அறிக்கையொன்றையும் வெளியிட்டுள்ளது. (இ–வெ)

## அனுமதி மறுப்பு

யாழ்ப்பாணம்)

தமிழீழவிடுதலை அணியின் கொள்கை விளக்கப் பிரசாரப் பொதுக்கூட்டம் இன்று மாலை யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற அனுமதி மறுக்கப்பட்டுள்ளது.

## சுவீப்...

(1–ம் பக்கத் தொடர்ச்சி)

| | |
|---|---|
| 07 O 0056 | 09 O 0644 |
| 19 O 0407 | 22 O 0547 |
| 23 O 0161 | 25 O 0468 |
| 26 O 0397 | 12 P 0249 |
| 08 P 0183 | 11 P 0569 |
| 14 P 0252 | 16 P 0756 |
| 17 P 0225 | 18 P 0124 |
| 20 P 0775 | 14 Q 0730 |
| 18 Q 0145 | 19 Q 0824 |
| 21 Q 0158 | 01 R 0338 |
| 05 R (117 | 05 R 0631 |
| 09 R 0 37 | 03 S 0879 |
| 08 S 0466 | 06 T 0759 |
| 09 T 0836 | 13 T 0635 |
| 01 U 0'40 | 08 U 0680 |
| 13 U 0215 | 15 U 0504 |
| 26 U 0219 | 04 V 0929 |
| 10 V 0537 | 19 V 0790 |
| 20 V 0172 | 05 W 00'7 |
| 17 W 0547 | 20 W 0488 |
| 25 W 0318 | 03 X 0295 |
| 04 X 0062 | 11 X 0771 |
| 10 Y 0546 | 03 Z 0291 |
| 05 Z 0543 | 11 Z 087 |
| 16 Z 0864 | 26 Z 0551 |

(இவையாவும் உறுதிப்படுத்தப் படவேண்டும்) (இ)

## புதிய சாதனை!

(கொழும்பு

பெண்களுக்கான நூறு மீட்டர் தடைதாண்டி ஓட்டப் போட்டியில் செல்வகௌரி வரதகுமார் தமது ஓட்டத்தை 14–9 விஞடிகளில் நிறைவு செய்து புதிய சாதனையொன்றை நேற்று ஏற்படுத்தினுர்.

கொழும்பிலுள்ள பொலிஸ் விளையாட்டு மைதானத்தில் இடம்பெற்ற இலங்கை தேசிய மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டிகளிலேயே இப்புதிய சாதனையை நிறுவினுர்.

இலங்கையில் தடைதாண்டி ஓடுவதில் இப்புதிய சாதனையை நிறுவியிருக்கும் செல்வகௌரி வரதகுமார் எதிர்வரும் ஆசிய விளையாட்டுப் போட்டிகளிலும் பங்குபற்றவுள்ளார் (கி)

## அமைச்சர்...

[1–ம் பக்கத் தொடர்ச்சி]

கள் அமைச்சர் திரு. கே. டபிள்யூ தேவநாயகம் கூட்டம் முடியும வரை மௌனம் சாதித்தார்.

அமைச்சர் திரு, செ இராசதுரை திரு. தேவநாயகத்தின் அமைச்சு சம்பந்தப்பட்ட விஷயங்களைப் பற்றிக் குறிப்பிட்டுப்பேசிய போதும் திரு. தேவநாயகம் மௌனமே சாதித்தார். கூட்டம் முடிந்து போகும் போதும் ஒருவார்த்தை கூடத் பேசாமல் மௌனமாகச் சென்றுவிட்டார்.

விற்பனைக்கு
எங்கள் சொந்தப் பாவனையிலிருக்கும் கீழ் குறிப்பிட்ட மோட்டார் வாகனங்கள் விற்பனைக்கு உள்ளன.
[1] அசோக் லெயிலன்ட் [7 ½ தொன்) லொறி 26 ஸ்ரீ 6461.
[2] பெட் வோட் — 1966 மொடல் – 10 அந்தர் வான் 33 ஸ்ரீ 9659
தேவைப்படுவோர் வாகனங்களை எமது மோட்டார் பகுதியில் பார்வையிட்டு கேள்வித் தொகையை எமக்குச் சீல் இட்ட பதிவுத் தபாலில் 30 – 9 – 82 க்கு முன் கிடைக்கக் கூடியதாக அனுப்பிவைக்கவும்.
யாழ்ப்பாண ஐக்கிய வியாபாரச் சங்கம்
(வாகனப் பகுதி)
420, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
4505

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் [illegible] வீதி, 66–ம் இல [illegible] அச்சகத்தில் 1982 செப். 19–ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது. Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number Q.B. 100236(?)
Eelanadu — P. O. Box 49 Telegrams 'Eelanadu' T'phone: 389 and 81[illegible]